




PRGI No. TNBIL/25/A1569

வைகறையில் **பேப்பர்பாய்**

www.paperboy.biz

VAIGARAIYIL PAPERBOY








சென்னை மலர்: 01 இதழ்: 179 10.02.2026 செவ்வாய்க்கிழமை ▸▸Chennai ▸▸Volume: 01 ▸▸Issue: 179 ▸▸Tuesday ▸▸pages 8 ▸▸Rs.5/-

DISTRIBUTED ACROSS TAMILNADU AND PUDUCHERRY


# வாழ்க்கையில் ஒழுக்கம் மிகவும் முக்கியம்

## மாணவர்களுக்கு பிரதமர் மோடி அறிவுரை

**புதுடில்லி,பிப்.10:**

நாடு முழுதும் தேர்வுக்கு தயாராகி வரும் மாணவர்களை ஊக்கப்படுத்தும் வகையில், கடந்த 2018 முதல் 'பரீக்ஷா பே சர்ச்சா' எனப்படும் தேர்வு குறித்த கலந்துரையாடல் நிகழ்ச்சியை பிரதமர் மோடி நடத்தி வருகிறார். தொடர்ந்து 9வது ஆண்டாக நடக்கும் இந்நிகழ்வின், இரண்டாவது பதிப்பு இன்று (பிப்.,09) நடந்தது. குஜராத்தின் தேவ்மோர்கா, தமிழகத்தின் கோவை, சத்தீஸ்கரின் ராய்ப்பூர், அசாமின் குவஹாத்தி மாவட்டங்களில் இருந்து மாணவர்கள் நேரில் பங்கேற்றனர்.

மாணவர்களுடன் கலந்துரையாடிய பிரதமர் மோடி கூறியதாவது: பல ஆண்டுகளாக 'பரீக்ஷா பே சர்ச்சா' நிகழ்ச்சி மூலம் 10ம் வகுப்பு மற்றும் 12ம் வகுப்பு மாணவர்களுடன் கலந்துரையாடி வருகிறேன். கற்றுக்கொள்வதற்காகவே மாணவர்களுடன் கலந்துரையாடுகிறேன். கற்றுக் கொடுக்க அல்ல.



தமிழால் நான் தமிழாலேயே நான்!

எனது நாட்டில் 10 மற்றும் 12ம் வகுப்பு படிக்கும் மாணவர்கள் மனதிலும் 2047 ல் வளர்ந்த இந்தியா என்ற கனவு இருப்பதை பார்ப்பது மகிழ்ச்சி அளிக்கிறது. வளர்ந்த நாடுகளின் பழக்க வழக்கங்களை நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும். சிக்னலில் சிவப்பு விளக்கு எரிந்தால் வாகனங்களை அணைத்து வைக்க வேண்டும். உணவுகளை வீணாக்கக்கூடாது. கழிவுகளை குறைக்க வேண்டும்.

நமது வாழ்க்கையில் ஒழுக்கம் என்பது மிகவும் முக்கியமானது. ஒழுக்கம் இல்லாவிட்டால், எவ்வளவு உழைப்பு இருந்தாலும் அதனால் பயன் இல்லை.

ஏஐ அல்லது மொபைலை நமது எஜமானார்களாக ஆக்கக்கூடாது. ஏஐ எனப்படும் செயற்கை நுண்ணறிவை திறமையாக பயன்படுத்த வேண்டும். தொழில்நுட்பங்களுக்கு நாம் அடிமையாகக்கூடாது. தொழில்நுட்பத்தை பயன்படுத்தி நமது திறமைகளை வளர்த்துக் கொள்ள வேண்டும். ஏஐயை பார்த்து நாம் பயப்பட தேவையில்லை.

நமது வாழ்க்கைக்கும், சமூக வாழ்க்கைக்கும் கல்வி என்பது மிகவும் முக்கியமானது. அதனை குறைவாக எடைபோடக்கூடாது. 'நாம் விளையாட்டில் சிறந்து விளங்குகிறோம். அதனால் படிக்க தேவையில்லை' என யாரும் தவறாக நினைக்கக்கூடாது. உங்களுக்குள் என்ன திறமை இருந்தாலும் அதனை வளர்த்தக் கொள்ள வேண்டும். இவ்வாறு பிரதமர் மோடி கூறினார்.

# இன்றைய நாள்

செவ்வாய்க்கிழமை
(10–02–2026)
விசுவாவசு ஆண்டு, தை –27
பிறை: தேய்பிறை
திதி
அஷ்டமி காலை 9.09 வரை
பிறகு நவமி
நட்சத்திரம்:
விசாகம் காலை 9.35 வரை
பிறகு அனுஷம்
யோகம்
மரண/சித்தயோகம்
ராகுகாலம்
பிற்பகல் 3.00–4.30 மணி
எமகண்டம்
காலை 9.00 10.30 மணி.
சூலம் – வடக்கு.
நல்ல நேரம் :
காலை 8–9 மணி.
மாலை 5–6 மணி

| | |
|---|---|
| மேஷம் | ஆக்கம் |
| ரிஷபம் | அமைதி |
| மிதுனம் | மகிழ்ச்சி |
| கடகம் | லாபம் |
| சிம்மம் | நட்பு |
| கன்னி | உதவி |
| துலாம் | பெருமை |
| விருச்சிகம் | நற்செயல் |
| தனுசு | சாதனை |
| மகரம் | நேர்மை |
| கும்பம் | உயர்வு |
| மீனம் | பணிவு |

# வேட்பாளர் தேர்வு: த.வெ.க. தலைவர் விஜய் இன்று ஆலோசனை



**சென்னை,பிப்.10:**

விஜய் தலைமையிலான தமிழக வெற்றிக் கழகம் முதன்முறையாக 2026 சட்டமன்ற தேர்தலில் போட்டியிட இருக்கிறது. தேர்தலுக்கான பணிகளை த.வெ.க. நிர்வாகிகள் செய்து வருகின்றன.

த.வெ.க. சார்பில் போட்டியிட விரும்புவோர் விருப்பமனு பெற்றுக்கொள்ளலாம் என த.வெ.க. அறிவித்தது, விருப்பமனு விநியோகம் செய்யப்பட்ட அன்று 1.30 மணி நேரத்திற்குள் 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மனுக்கள் விநியோகம் செய்யப்பட்டன. அதிகமான கூட்டம் வந்ததால் ஆன்லைன் மூலம் விருப்பமனு பெற்றுக்கொள்ளலாம் என கட்சி சார்பில் தெரிவிக்கப்பட்டது.

தொடர்ந்து விருப்ப மனு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

இந்த நிலையில் நாளை மாவட்ட செயலாளர்களுடன் தலைவர் விஜய் ஆலோசனை நடத்துவார் என ஆதவ் அர்ஜுனா தெரிவித்துள்ளார்.

வேட்பாளர்கள் தேர்வு குறித்து மாவட்ட செயலாளர்கள் ஆலோசனை நடத்துவார் எனத் தெரிகிறது. இந்த கூட்டம் Zoom Meeting மூலம் நடைபெறும் எனவும் தெரிவித்துள்ளார்.

# தமிழ்நாடு தொழில் துறையில் முன்னோடியாக திகழ்ந்து வருவதற்கு டாடா நிறுவனமே ஒரு சாட்சி



## முதலமைச்சர் பேச்சு

**ராணிப்பேட்டை,பிப்.10:**

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகம் துறை சார்பில் ராணிப்பேட்டை மாவட்டம், பனப்பாக்கம் சிப்காட் தொழிற் பூங்காவில் ரூ.9 ஆயிரம் கோடியில் முதலீடு மற்றும் 5 ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் டாடா மோட்டார்ஸ் ஜாகுவார் லேண்ட் ரோவர் நிறுவனத்தின் வாகன உற்பத்தி ஆலை அமைப்பதற்கு கடந்த 2024-ம் ஆண்டு செப்டம்பர் 28-ந்தேதி அடிக்கல் நாட்டினார்.

இந்த நிலையில் டாடா தொழிற்சாலைகளை திறந்து வைத்து தொழிற்சாலையில் உற்பத்தி செய்யப்பட்டுள்ள முதல் வாகனத்தின் இயக்கத்தை தொடங்கி வைப்பதற்காக இன்று மு.க.ஸ்டாலின் பனபாக்கத்திற்கு வருகை தந்தார்.

வழி நெடுகிலும் கட்சியினர் மற்றும் பொதுமக்கள் மேளதாளம், தாரை தப்பட்டை, ஒயிலாட்டம் என பல்வேறு கலை நிகழ்ச்சிகளுடன் முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு, மாவட்ட தி.மு.க. செயலாளரும், கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் ஆர். காந்தி தலைமையில் சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது. பின்னர் டாடா தொழிற்சாலை வளாகத்தில் உள்ள ரத்தன் டாடா உருவ சிலைக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் மரியாதை செலுத்தினார். இதைத்தொடர்ந்து டாடா தொழிற்சாலையினை திறந்து வைத்து, தொழிற்சாலையில் உற்பத்தி செய்யப்பட்டுள்ள முதல் வாகனத்தின் இயக்கத்தை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார். இந்த ஆலையின் முதலாவது ஜாகுவார் லேண்ட்ரோவர் வாகனத்தை ஓட்டி பார்த்தார். கார்களை கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

பின்னர் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பேசியதாவது:-

டாடா மோட்டார்ஸ் நிறுவனத்தை தொடங்கி வைத்ததில் மிகவும் பெருமை அடைகிறேன். இந்தியாவின் தொழில் நிறுவனங்களில் மிக முக்கியமானது டாடா நிறுவனம்.

ஆட்டோமொபைல் ஸ்டீல் ஏர்லைன்ஸ் தொலைதொடர்பு என பல துறைகளில் தடம் பதித்து மிகப்பெரிய சாதனை படைத்துள்ள நிறுவனம்தான் டாடா குழுமம். இந்தியாவின் வாகன உற்பத்தி மற்றும் மின்வாகனத்தின் தலைநகரம் தமிழ்நாடு தான். தொழில்துறை வளர்ச்சியில் டி.ஆர்.பி. ராஜா சிறப்பாக செயலாற்றி வருகிறார்.

தமிழ்நாடு தொழில்துறையில் முன்னோடியாக திகழ்ந்து வருவதற்கு இந்த டாடா மோட்டார்ஸ் தொழில் நிறுவனமே ஒரு சாட்சி.

உலக நாடுகளே தொழில் முதலீட்டின் தமிழ்நாட்டிடம் போட்டி போட்டு வருகிறார்கள். தமிழ்நாடு வந்தோரை வாழவைக்கும் அதுதான் எங்கள் பண்பாடு. பொருளாதாரம் பெண்கள் முன்னேற்றத்திற்கு தமிழ்நாடு முக்கிய பங்காற்றி வருகிறது. இன்னும் பல்வேறு தொழில் நிறுவனங்களை தமிழ்நாட்டிற்கு கொண்டு வர வேண்டும் என்றார்

நிகழ்ச்சியில் நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு. ஆர்.காந்தி, டி.ஆர்.பி.ராஜா, ஜெகத்ரட்சகன் எம்.பி. சட்டமன்ற உறுப்பினர்கள், அதிகாரிகள், தொழிலதிபர்கள் கலந்து கொண்டனர்.

முதலமைச்சர் வருகையையொட்டி டிரோன்கள் பறக்க தடை விதிக்கப்பட்டிருந்தது. 1000-க்கும் மேற்பட்ட போலீசார் குவிக்கப்பட்டு பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்தனர்.

# ஹோட்டலில் வட மாநில தொழிலாளர்களுக்கு துன்புறுத்தல்

## அண்ணாமலை கண்டனம்

**ஈரோடு,பிப்.10:**

ஈரோடு மாவட்டம் கஞ்சிகோவில் பகுதியில் ஹோட்டலில் பணியாற்றிக் கொண்டிருந்த வடமாநில தொழிலாளரை போலீசார் தாக்கிய சம்பவத்திற்கு பாஜ மாநில முன்னாள் தலைவர் அண்ணாமலை கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்

அவரது அறிக்கை ; சட்டத்தை நிலைநிறுத்துவதற்கே போலீசாருக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது . ஆனால் , ஒருவர் எந்த மாநிலத்தைச் சேர்ந்தவர் என்பதை மட்டுமே வைத்து , அவர்களின் சொத்துக்களுக்கு சேதம் விளைவிக்கவோ , அவர்களை துன்புறுத்தவோ , அவமதிக்கவோ அல்லது தாக்கவோ போலீசாருக்கு எந்த உரிமையும் இல்லை

ஊழல் நிறைந்த தி மு க ஆட்சியில் மாநிலம் முழுதும் உள்ள புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் உடல் ரீதியாகவும் , மொழி ரீதியாகவும் அதிகளவில் துன்புறுத்தப்படுவதில் எந்த



ஆச்சரியம் ஏதுமில்லை . தமிழகத்தின் பொருளாதாரத்திற்கு புலம்பெயர் தொழிலாளர்கள் ஈடுசெய்ய முடியாத பங்களிப்பை நாம் அங்கீகரிக்க வேண்டிய நேரம் இது . மெட்ரோ ரயில் திட்டங்கள் , தேசிய நெடுஞ்சாலைகள் முதல் குடியிருப்பு கட்டிடங்கள் , தொழிற்சாலைகள் மற்றும் சிறு உற்பத்தி நிறுவனங்கள் வரையிலான நமது பொருளாதார நடவடிக்கைகளின் ஒவ்வொரு தூணும் அவர்களின் உழைப்பைச் சார்ந்தே உள்ளன . எனவே , அவர்களுக்கான கண்ணியத்தை கொடுக்க மறுப்பது என்பது நமது வளர்ச்சியை நாமே சீர்குலைப்பதாகும் . இதுபோன்ற சம்பவங்கள் , அரசியல் லாபத்திற்காக திமுகவினரால் புலம்பெயர் தொழிலாளர்களுக்கு எதிராக பல ஆண்டுகளாக விதைக்கப்பட்ட வெறுப்பின் தவிர்க்க முடியாத செயல்களின் வெளிப்பாடு தான் , இவ்வாறு அவர் குறிப்பிட்டுள்ளார்

# பா.ம.க.-வின் தலைவர் அன்புமணிதான்..! டெல்லி நீதிமன்றத்தில் மீண்டும் உறுதிசெய்த தேர்தல் ஆணையம்

**சென்னை,பிப்.10:**

அங்கீகரிக்கப்படாத கட்சியின் உட்கட்சி விவகாரங்களில் ஆணையம் முடிவு செய்ய முடியாது என்ற உத்தரவை மாற்றக்கோரி தேர்தல் ஆணையம் தாக்கல் செய்த மறு ஆய்வு மனுவில் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கட்சி உரிமை கோரல் பிரச்சனை எழுவதற்கு முன்பாக கிடைத்த ஆவணங்களின் அடிப்படையில் முடிவு செய்யப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

பாமக விஷயத்தில் முடிவெடுத்துள்ளது பற்றி தேர்தல் ஆணையம் டெல்லி உயர்நீதிமன்றத்தில் விளக்கம் அளித்துள்ளது. இதன்மூலம், தேர்தல் ஆணையம் அன்புமணியை பாமக தலைவராக ஏற்கனவே அங்கீகரித்ததை




தெளிவாக்கியுள்ளது.

தற்போதைய சூழலில் நீதிமன்றம் பாமக கட்சி வழக்கு தொடர்பாக எந்த ஒரு கருத்தையும் தெரிவிக்க விரும்பவில்லை என டெல்லி உயர்நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

பாமகவின் தலைவர், நிர்வாகிகள் யார் என்பதை அங்கீகரிக்க தேர்தல் ஆணையத்தக்கு தடை இல்லை என்ற வாதத்தை பதிவு செய்கிறோம் என்றும் தேர்தல் ஆணைய வழக்கறிஞர், ராமதாஸ் தரப்பு வழக்கறிஞர்களின் வாதத்தை மட்டுமே பதிவு செய்கிறோம் என நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

## பள்ளி மாணவர்களிடையே வாசிப்பு பயிற்சி



**திருநெல்வேலி, பிப்.10:** ஒன்பதாவது பொருநை புத்தகத் திருவிழாவை முன்னிட்டு பள்ளி மாணவருடைய வாசிப்பு பழக்கத்தை ஏற்படுத்தும் விதமாக மாணவர்கள் அனைவரும் வாசிக்கும் நிகழ்ச்சி திருநெல்வேலி மாவட்டம் பேட்டை காமராஜர் நகர் மன்ற மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு பள்ளியின் தலைமை ஆசிரியை இவாஞ்சலின் தலைமை தாங்கினார் நிகழ்ச்சியில் பள்ளியின் ஆசிரியர்கள் மற்றும் தலைமை ஆசிரியர்கள் வாசிக்கும் பழக்கத்தில் நன்மைகள் குறித்து எடுத்துக் கூறினர் .

நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை பள்ளியின் நூலக பொறுப்பாளரும் ஓவிய ஆசிரியருமான திரு மாரியப்பன் செய்திருந்தார்.

## அறக்கட்டளை சொற்பொழிவு



**திருச்சி, பிப்.10:** திருச்சி தூய வளனார் கல்லூரி தமிழாய்வுத்துறை அறக்கட்டளை சார்பில் A.V. அரங்கில் , சிங்கப்பூர் கவிஞர் பிச்சினிக்காடு இளங்கோ " தமிழே தமிழரின் முகவரி" என்ற தலைப்பில் சிறப்புரை ஆற்றினார்.

தன் முகம் கவிஞர் என அடையாளப்படுத்தப்பட்டாலும் அதன் முகவரி தமிழ் தந்தது என்றார்.

கல்லூரியில் தமிழை ஒரு பாடமாகப் பயிலாத தானே தமிழால் உயர்வு பெற்றிருக்கும் போது தமிழ் பயிலும் மாணவர்கள் தங்களது தனித்திறமைகளை வளர்த்துக் கொள்ள வேண்டும் என்றார்.

திருச்சி அகில இந்திய வானொலியில் இவர் பணிபுரிந்த போது கொல்லங்குடி கருப்பாயி இவர் எழுதிய பாடலைப் பாடியதையும். சிங்கப்பூர் ஒலிபரப்பு கழகத்தில் கவிஞர் வைரமுத்துவை இவர் நேர்காணல் செய்ததையும் அடுத்த நாள் நாளிதழில் அதுபற்றிய செய்தி இடம் பெற்றதையும் குறிப்பிட்டார்.

முன்னதாக கல்லூரியின் துணை முதல்வர் அருள்முனைவர் ச.அருள் ஒளி தலைமை உரையாற்ற , முனைவர் ஜா.சலேத் வரவேற்புரை ஆற்ற முனைவர் ரெ.நல்லமுத்து அறிமுக உரை நிகழ்த்தினார்.

முனைவர் ஜோசப் சகாயராஜ், , சிங்கப்பூர் தமிழ் எழுத்தாளர் கழகத்தின் மேனாள் தலைவர் நா.ஆண்டியப்பன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

இறைவணக்கம், தமிழ்த்தாய் வாழ்த்துடன் தொடங்கிய நிகழ்வை மாணவி ஸ்ரீநிதி நெறியாளுகை செய்தார். முனைவர் போ.ஜான்சன் நன்றி நவில நாட்டுப்பண் உடன் நிகழ்ச்சி இனிதே நிறைவடைந்தது.

**ஸ்ரீகாந்த் திருச்சி**

## மகளிர் கூட்டமைப்பு நிர்வாகிக்கு அமைச்சர் பாராட்டு



**மயிலாடுதுறை , பிப்.10:** மயிலாடுதுறை மாவட்டத்தில் “என் ஊர் என் கனவு”மாவட்ட தொலைநோக்கு திட்டம் - 2030 கருத்தரங்கம் நடைபெற்றது. தொலைநோக்கு திட்டம் - 2030 உத்திகள் மற்றும் திட்ட ஆவணம் குறித்து தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள், துறை சார்ந்தவர்கள், சேவை சங்க பிரதிநிதிகள் போன்றவர்களிடமிருந்து பெறப்பட்ட கருத்துக்கள் மற்றும் ஆலோசனைகள் அரசுக்கு உரிய நடவடிக்கை எடுப்பதற்காக அனுப்பி வைக்கப்படும் வகையில் நடைபெற்ற இக்கருத்தரங்கை மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் தொடங்கி வைத்தார்.

தொடர்ந்து விளையாட்டுத் துறை, கல்வித்துறை, வேளாண்மைத் துறை, மாற்றுத்திறனாளிகள் துறை, மகளிர் திட்டம் உள்ளிட்ட துறைகளில் சிறந்து விளங்கியவர்களை பாராட்டி நற்சான்று வழங்கும் நிகழ்வு நடைபெற்றது.

இதில், மயிலாடுதுறை நகராட்சிக்குட்பட்ட ஆரோக்கிய நாதபுரம் பகுதியில் செயல்பட்டு வரும் பகுதி அளவிலான குழு கூட்டமைப்பு மூலம் அனைத்து மகளிர் குழுக்களுக்கும் மகளிர் திட்டம் சார்ந்த அனைத்து பயன்களையும் பெற்று சேர்த்தமைக்காகவும், வங்கி பெருங்கடன் 25 லட்சம் ரூபாய் மற்றும் பி.எம்.பி.எஃப்.எம்.இ திட்டத்தின் மூலம் பெறப்பட்ட ரூபாய் 12 லட்சம் நிதியை அனைத்து குழு உறுப்பினர்களும் பயன்பெறும் வகையில் வழங்கியது மற்றும் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் மகளிர் திட்ட பணிகளை முழு ஈடுபாட்டோடு சிறப்பாக பணியாற்றி வருவதற்காக ஆரோக்கியநாதபுரம் பகுதி அளவிலான குழு கூட்டமைப்பு பொருளாளர் மெசியா மார்கிரேட்டுக்கு அமைச்சர் மெய்யநாதன் பொன்னாடை அணிவித்து நினைவுப்பரிசு வழங்கி பாராட்டினார்.

இந்நிழ்வில், மாவட்ட ஆட்சியர் ஹெச்.எஸ். ஸ்ரீகாந்த், தாட்கோ தலைவர் இளையராஜா, சட்டமன்ற உறுப்பினர்கள் நிவேதா எம் முருகன், பன்னீர்செல்வம், ராஜகுமார் மற்றும் அரசு அலுவலர்கள், அரசியல் பிரமுகர்கள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

## மாநில அளவிலான துளிர் வினாடி வினா போட்டியில் கீழக்கரை ஹமீதியா பெண்கள் மேல்நிலைப்பள்ளி மாநில அளவில் முதலிடம்




**நெய்வேலி, பிப்.10:** மாநில அளவிலான துளிர் வினாடி வினா போட்டியில் கீழக்கரை ஹமீதியா பெண்கள் மேல்நிலைப்பள்ளி மாநில அளவில் முதலிடம்.

தமிழ்நாடு அறிவியல் இயக்கம் சார்பில் மாநில அளவிலான துளிர் வினாடி வினா போட்டி நெய்வேலி என்.எல்.சி. ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் தமிழ்நாடு அறிவியல் இயக்க மாநில பொதுச் செயலாளர் முகமது பாதுஷா தலைமையில் நடைபெற்றது.

மாலையில் நடைபெற்ற மாநில அளவிலான போட்டியில், 11,12 வகுப்பு தமிழ் பிரிவில் ஹமீதியா பெண்கள் மேல்நிலைப்பள்ளி, கீழக்கரை முதலிடம் பெற்றது.

9,10 வகுப்பு ஆங்கிலம் பிரிவில் வேலு மாணிக்கம் மெட்ரிக் பள்ளி, இராமநாதபுரம் மூன்றாம் இடம் பெற்றது.

முன்னதாக, காலையில் நடைபெற்ற மண்டல அளவிலான போட்டியில், 6,7,8 வகுப்பு தமிழ் பிரிவில் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி, முத்துவயல் முதலிடத்தையும், கே.எஸ்.எஸ். என்.நடுநிலைப்பள்ளி, சாயல்குடி இரண்டாம் இடத்தையும் பெற்றது.

9,10 வகுப்பு தமிழ் பிரிவில் அரசு மேல்நிலைப் பள்ளி, சாயல்குடி மூன்றாம் இடத்தை பெற்றது.

11,12 வகுப்பு தமிழ் பிரிவில் ஹமிதியா மேல்நிலைப்பள்ளி, கீழக்கரை முதல் இடத்தை பெற்றது. 6,7,8 வகுப்பு ஆங்கிலம் பிரிவில் வேலு மாணிக்கம் மெட்ரிக் பள்ளி, இராமநாதபுரம் மூன்றாம் இடத்தை பெற்றது. 9,10 வகுப்பு ஆங்கிலம் பிரிவில் வேலு மாணிக்கம் மெட்ரிக் பள்ளி, இராமநாதபுரம் முதல் இடத்தை பெற்றது.

11,12 வகுப்பு ஆங்கிலம் பிரிவில் லூயிஸ் லெவேல் மெட்ரிக் பள்ளி, இராமநாதபுரம் இரண்டாம் இடத்தை பெற்றது.

மாநில / மண்டல அளவில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பாராட்டு சான்றிதழ், கேடயம் அறிவியல் இயக்க மாநில நிர்வாகிகள் மற்றும் சிறப்பு விருந்தினர்களால் வழங்கப்பட்டது.

முன்னதாக, இராமநாதபுரம் மாவட்ட செயலாளர் ஜீவானந்தம் வழிகாட்டலில், துளிர் வினாடி வினா போட்டி மாவட்ட ஒருங்கிணைப்பாளர் கணேசன் ஒருங்கிணைப்பில், சமம் மாவட்ட மகளிர் ஒருங்கிணைப்பாளர் கல்பனா, மாவட்ட செயற்குழு உறுப்பினர் சுதாகர் முன்னெடுப்பில், வேன் மூலம் 9 பள்ளிகளின் வழிகாட்டி ஆசிரியர்கள், மாணவர்கள் என 35 பேர் அழைத்துச் செல்லப்பட்டனர்.

பங்கேற்பு மற்றும் மாநில/ மண்டல அளவில் வெற்றி பெற்ற மாணவர்களை, வழிகாட்டி ஆசிரியர்களை அறிவியல் இயக்க மாநில மற்றும் மாவட்ட நிர்வாகிகள் பாராட்டினர்.

## விடியா ஆட்சி உங்கள் வீட்டு BILL -லே சாட்சி

**நன்னிலம், பிப்.10:** விடியா ஆட்சி உங்கள் வீட்டு BILL -லே சாட்சி திமுக ஆட்சியில் விலைவாசி உயர்வால் பொதுமக்களுக்கு ஏற்பட்ட இழப்புகள் குறித்து பிரச்சாரத்தை முன்னாள் அமைச்சர் ஆர். காமராஜ் நன்னிலம் பகுதியில் துவக்கி வைத்தார்..

சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவரும், அதிமுக பொதுச் செயலாளருமான புரட்சித் தமிழர் எடப்பாடியார் ஆணைக்கிணங்க..

அதிமுக தகவல் தொழில்நுட்ப பிரிவின் சார்பாக தமிழகம் முழுதும் "விடியா ஆட்சி உங்கள் வீட்டு BILL-லே சாட்சி" எனும் வீட்டுக்கு வீடு பிரச்சாரம்.. தமிழகம் முழுதும் நடைபெற்று வருகிறது...அதன் ஒரு பகுதியாக..

திருவாரூர் மாவட்டம், நன்னிலம் தொகுதிக்கு உட்பட்ட நன்னிலம் பேரூராட்சி பகுதி மற்றும் பேரளம் பேரூராட்சி பகுதியில் திருவாரூர் அதிமுக மாவட்ட செயலாளரும், கழக அமைப்புச் செயலாளரும், நன்னிலம் தொகுதி சட்டமன்ற உறுப்பினரும், முன்னாள் அமைச்சருமான ஆர். காமராஜ் பிரச்சாரத்தை துவக்கி வைத்தார்.



இந்த பிரச்சாரத்தில்.. வீடு வீடாக சென்று..தற்போது திமுக அரசின் ஐந்தாண்டு ஆட்சியில் விலைவாசி உயர்வால் ஏற்பட்ட இழப்புகளை தெரிவிக்கும் விதமாக கடந்த அதிமுக ஆட்சியில் இருந்த விலைவாசியையும்.. தற்போதைய திமுக ஆட்சியில் உள்ள விலைவாசியையும் ஒப்பிட்டு மாதாந்திர செலவு மற்றும் கூடுதல் சுமை குறித்த விலைவாசி ஒப்பிட்டு விபரம் அடங்கிய பில்லை உடனுக்குடன் அச்சிட்டு மக்களுக்கு வழங்கப்பட்டது.

முன்னாள் அமைச்சர் காமராஜ்.. மக்களுக்கு அன்றாடம் தேவைப்படும் அத்தியாவசிய பொருட்களான பால், அரிசி, சர்க்கரை, சமையல் எண்ணெய் உள்ளிட்ட பொருட்களின் விலை மற்றும் மின் கட்டண உயர்வு, வீட்டு வரி உயர்வு உள்ளிட்ட மாதாந்திர செலவு விபரம் ஆகியவை களை ஒவ்வொரு குடும்பத்தினரிடமும் கேட்டறிந்தார்.

கடந்த அதிமுக ஆட்சி... மற்றும் தற்போதுள்ள திமுக ஆட்சியில் உயர்ந்துள்ள விலைவாசியின் வித்தியாசத்தை ஒவ்வொரு குடும்பத்தாரிடமும் விவரித்து கூறினார்.

மேலும் புரட்சித் தமிழர் எடப்பாடியார் அறிவித்த முத்தான தேர்தல் வாக்குறுதிகள் அடங்கிய துண்டு பிரசுரத்தை முன்னாள் அமைச்சர் வழங்கினார்.

இந்த நிகழ்வில்.. முன்னாள் நாகை நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் கே கோபால், நன்னிலம் வடக்கு ஒன்றிய செயலாளர் சி பி ஜி அன்பழகன், தகவல் தொழில்நுட்ப தஞ்சை மண்டல இணைச் செயலாளர் செல் சரவணன், மாவட்ட எம்ஜிஆர் மன்ற செயலாளர் சம்பத், நன்னிலம் நகர செயலாளர் பக்கிரிசாமி மற்றும் பேரளம் நகர செயலாளர் திலகம் சுந்தரமூர்த்தி உள்ளிட்ட அனைத்து நிலை பொறுப்பாளர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

## திசையன்விளை மனோ கல்லூரியில் மத்திய அரசின் பட்ஜெட் மீதான வினாடி வினா போட்டி



**திசையன்விளை, பிப்.10:** திசையன்விளை மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகக் கல்லூரி, நாட்டு நலப்பணித் திட்டம் (National Service Scheme) சார்பில், மத்திய அரசின் பட்ஜெட்டை மாணவர்களிடையே அறிமுகப்படுத்தும் நோக்கில் “மை பாரத் மத்திய அரசின் பட்ஜெட் வினாடி வினா போட்டி” என்ற விழிப்புணர்வு நிகழ்ச்சி சிறப்பாக நடத்தப்பட்டது.

இந்த நிகழ்ச்சி கல்லூரி முதல்வர் முனைவர் டி லில்லி அவர்களின் தலைமையில் நடைபெற்றது. மாணவர்கள் நாட்டின் பொருளாதார நிலை, அரசின் வரவுசெலவு திட்டங்கள், வளர்ச்சித் திட்டங்கள் குறித்த அடிப்படை புரிதலை பெற வேண்டும் என்ற நோக்கில் இந்த நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டது. இந்த வினாடி வினா போட்டியானது மத்திய அரசின் My Bharat இணையதளத்தின் மூலம் நடத்தப்பட்டதாகும். அதில் மத்திய அரசின் பட்ஜெட்டை மையமாகக் கொண்டு தயாரிக்கப்பட்ட 30 கேள்விகள் (Multiple Choice Questions) வழங்கப்பட்டிருந்தன. அந்த வினாக்களுக்கு மாணவர்கள் எவ்வாறு ஆன்லைன் முறையில் விண்ணப்பித்து பதிலளிக்க வேண்டும் என்பது குறித்து நாட்டு நலப்பணித் திட்ட மாணவர்களுக்கு தெளிவான பயிற்சி வழங்கப்பட்டது.

நிகழ்ச்சியின் ஒரு பகுதியாக, My Bharat இணையதளத்தில் பதிவு செய்வது, வினாடி வினா தேர்வை தேர்வு செய்வது, நேர மேலாண்மை மற்றும் பதில்களை சரியாக சமர்ப்பிப்பது போன்ற நடைமுறை விளக்கங்களும் மாணவர்களுக்கு வழங்கப்பட்டன. இதனைத் தொடர்ந்து, கல்லூரியின் அனைத்து நாட்டு நலப்பணித் திட்ட மாணவர்களும் இந்த வினாடி வினா தேர்வை ஆன்லைன் முறையில் உற்சாகத்துடன் எழுதினர். இந்த நிகழ்ச்சிக்கான அனைத்து ஏற்பாடுகளையும் நாட்டு நலப்பணித் திட்ட அலுவலர் முனைவர் சு. பலவேசகிருஷ்ணன் சிறப்பாக செய்திருந்தார். மாணவர்களிடையே தேசிய பொருளாதாரம், அரசின் பட்ஜெட் செயல்முறை மற்றும் குடிமக்களின் பொறுப்புகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் இந்த நிகழ்ச்சி மிகப் பயனுள்ளதாக அமைந்தது.

நிகழ்ச்சியின் முடிவில், இத்தகைய விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் மாணவர்களின் அறிவுத்திறனை வளர்ப்பதோடு, நாட்டின் வளர்ச்சியில் அவர்கள் பங்களிப்பை உணரச் செய்கின்றன எனக் கருத்துகள் தெரிவிக்கப்பட்டன.

## அரசு கல்லூரியில் கொத்தடிமை தொழிலாளர் முறை ஒழிப்பு தின உறுதிமொழி ஏற்பு



**அறந்தாங்கி, பிப்.10:** ஆவுடையார் கோயில் அருகே பெருநாவலூரில இயங்கி வரும் அறந்தாங்கி அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில், கொத்தடிமை தொழிலாளர் முறை ஒழிப்பு தின உறுதிமொழி ஏற்பு நிகழ்ச்சி நடைபெற்றது.

கல்லூரி முதல்வர் முனைவர் ம. துரை அவர்கள் தலைமை தாங்கித் தொடங்கி வைத்தார்.

கல்லூரிக் கணினி அறிவியல் துறைத்தலைவர் முனைவர் து. சண்முகசுந்தரம், நிருவாகவியல் துறைத்தலைவர் முனைவர் மு. அன்பழகன், தமிழ்த்துறைத்தலைவர் முனைவர் கா.காளிதாஸ், ஆங்கிலத்துறைத்தலைவர் பேராசிரியர் அ.கணேசன், வணிகவியல் துறைத் தலைவர் முனைவர் கு.சீனிவாசன், கணிதவியல் துறைத்தலைவர் முனைவர் பா.கிளாடிஸ், இயற்பியல் துறைத்தலைவர் முனைவர் ஏ. டேவிட்கலைமணிராஜ், வரலாற்றுத்துறைத்தலைவர் முனைவர் ரா. பிரகதாம்பாள், வேதியியல் துறைத்தலைவர் து. சிற்றரசு உள்ளிட்ட பேராசிரியர்கள்,நாட்டு நலப்பணித்திட்ட அலுவலர்கள், இளையோர் செஞ்சிலுவைச்சங்க ஒருங்கிணைப்பாளர், செஞ்சுருள் சங்க ஒருங்கிணைப்பாளர், கல்லூரிக் கண்காணிப்பாளர் பா.மகாராஜன் உள்ளிட்ட அலுவலகப்பணியாளர்கள், நாட்டு நலப்பணித்திட்ட தன்னார்வலர்கள் உள்ளிட்ட மாணவ, மாணவியர் பலரும் பங்கேற்றனர். கல்லூரி முதல்வர் அவர்கள் சார்பாக, கொத்தடிமை தொழிலாளர் முறை ஒழிப்பு தின உறுதிமொழியைக் கல்லூரி நாட்டு நலப்பணித்திட்ட அலுவலர் மு. பழனித்துரை வாசித்தளிக்க, அனைவரும் ஏற்றுக்கொண்டனர்.

## சின்னகரம் பள்ளி மாணவர்கள் கல்விச் சுற்றுலா





விழுப்புரம் மாவட்டம் வல்லம் ஊராட்சி ஒன்றியம் சின்னகரம் தொடக்கப் பள்ளி மாணவர்கள் கல்விசுற்றுலா ஆண்டுதோறும் ஆசிரியர்களுடன் சென்று வருவது வழக்கமாக உள்ளனர் அதனைத் தொடர்ந்து இந்தக் கல்வி ஆண்டிலும் கல்விச் சுற்றுலா சென்று உள்ளனர். **அகரம் ராமதாஸ் செய்தியாளர்**

## தூய்மை பணியாளர்களுக்கு காலை உணவு வழங்கும் தொடக்க விழா



திருப்பத்தூர் மாவட்டம் வாணியம்பாடி சட்டமன்ற தொகுதி, வாணியம்பாடி நகராட்சி தூய்மை பணியாளர்களுக்கு காலை உணவு வழங்கும் தொடக்க விழா. நிகழ்ச்சியில் நகர கழக செயலாளர், நகர மன்ற உறுப்பினர் V.S.சாரதி குமார் BE.,MC வாணியம்பாடி நகர மன்ற தலைவர் உமாபாய் சிவாஜிகணேசன் B.Sc கலந்து கொண்டு உணவு பரிமாறினர். நிகழ்வில் நகராட்சி ஆணையாளர் ரகுராமன், நகர மன்ற உறுப்பினர்கள், நகர கழக நிர்வாகிகள், நகராட்சி சுகாதார துறை அதிகாரிகள், தூய்மை பணியாளர்கள்,கழக நிர்வாகிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## கொத்தடிமைத் தொழிலாளர் முறை ஒழிப்பு உறுதிமொழி ஏற்பு நிகழ்ச்சி



திருப்பத்தூர் மாவட்ட காவல் அலுவலகத்தில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் V.சியாமளா தேவி., அறிவுறுத்தலின்படி மாவட்ட காவல் கூடுதல் காவல் கண்காணிப்பாளர் ரவீந்திரன்,(CWC) தலைமையில் கொத்தடிமை தொழிலாளர் ஒழிப்பு தின உறுதிமொழி ஏற்கப்பட்டது.


just499®
MLM SOFTWARE
All Types of MLM Software Solutions Available
Binary
Unilevel
Matrix
Board
Generation
ROI / Investment
ONLY Rs. 499
Website: just499.com
Phone/WhatsApp: 7789951009
Email: orderjust499@gmail.com


Sri Manjal Mart
தரமான ஆன்மீக பூஜை பொருள்களை குறைந்த விலையில் நிறைவாக வாங்க
20% OFF
www.manjalmart.com
7789951009
order@manjalmart.com


SADHANA DEVI.K
CAR WASH
SUPREME
Car Wash & Detailing
Car Foam Pressure Wash
Teflon Coating
Ceramic Wax Treatment
Under Chassis Painting
Interior Foam Wash / Stain Remover
Paint Correction / Protection
We Done Here
9840882711
7200043675
Supremecarwashchennai@gmail.com
No.17/4, Senniamman Koil Street, Tondiarpet, Chennai – 600 081.


Telecaller Job
Apply Today
Mobile Calling !!!!
Rs 250–Rs500 per day
Work From Home Jobs
Ananda Bhaskar
Rs 8000 – Rs 15000 per month
9337501889
7789941009


அருள்தரும்
தெய்வம்
என்றும் நம் இல்லங்களில்
www.arultharumdeivam.com
அற்புதமான ஆன்மீக செய்திகள், பரிகாரங்கள், ஸ்தல வரலாறு மற்றும் சுவாரஸ்யமான தகவல்கள் மாதம் இருமுறை படித்து ஆன்மீகத்தை அறியுங்கள்..



S.R
Call Drivers Travels
24 Hours
Man Power & All Vehicle Available
Prop. S.SRIRAM
Contact: 95513 81576 / 86086 22056
True Work is Our Capital
No.89/49,E.H.Road,Cornation Nagar,K.Pet,Ch-21.


Breaking News Card.com
www.breakingnewscard.com
We Create Professional
Breaking News Cards
Daily 4 Cards Plus
get News Portal FREE
Call: 7789951009
₹999 ONLY


ADVERTISE WITH US
CONTACT US
9438610756


Low Cost Matrimony Website
999 SITE
MATRIMONY
WEBSITE
RS.999/-
Call/Whatsapp - +91 7789951009


FREE MARRIAGE INFORMATION CENTER :
இலவச திருமண தகவல் மையம்
இலவச திருமண தகவல் மையம்
யாருக்கும் பணம் தர தேவை இல்லை
பணம் வங்கும் புரோக்கர்கள் தவிர்க்கவும்
www.enthuani.com
Call: 9337501889



FINDING THE PERFECT HOUSE YOU CAN CALL HOME
PREMA ENTERPRISES
DO YOU WANT TO
BUY
OR
SELL
PROPERTY OR LAND?
+91 9884417843


Vilambaram
We provide Targeted Leads to grow your buisness
Boost your business
Call:: 91 7789941009, 9337501889
www.vilambaram.com


THINKING to BUY / SELL / RENT
a PROPERTY
New / Resale ..
Residential / Commercial ..
Plots
Flats
House
Villa
Bungalows
Farm Land
Ware Houses
Factory Sites
Sheds
JOINT VENTURES INVITED
MK REAL ESTATE
Tell me your Budget ⇨ We Show Your Home
Call :7871617005


Vilambaram
www.vilambaram.com
WE ARE Digital Marketing Agency
We are the
LEADS GENERATION
FACTORY
For Your
REAL ESTATE
BUSINESS
* Business Lead
* 100% Verified Lead
* Targeted Lead
GROW YOUR BUSINESS WITH US
for more details
+91 7789941009
+91 9337501889
vilambarampage@gmail.com
80 %OFF SPECIAL OFFER DISCOUNT
90 DAYS MONEY BACK GUARANTEE


CUSTOMIZED
MLM SOFTWARE
STARTS WITH
Rs.9999*
ONLY
BINARY PLAN
GENERATION PLAN
SINGLE LEG PLAN
MATRIX PLAN
CRYPTOCURRENCY
CONTACT
9445242169



Vilambaram
WE HELP YOU TO BOOST YOUR BUSINESS
VISIT:VILAMBARAM.COM
CONTACT: 8122798599


Get Free Jobs Alert on Your
WhatsApp
Register Yourself on our
8122664699
WhatsApp Your Name, Age & Address on Above Number
Josh Jobs Team Give u Daily Update of Govt. as Well as Private Jobs


ST COURIER
The People's Choice
ISO 9001:2008 Certifed
DOMESTIC - INTERNATIONAL
Old No. 1/2, New No.3, Kesavan St., Tondiarpet, Chennai-600081.
Cell: 9176130601

# கவிதை அரங்கம்!






உன் சாதனைகள்
உன்னை உயர்த்தும்

வெற்றி பெறுவதற்கான
விருப்பம் முக்கியம் தான்
ஆனால் அதை
விட முக்கியம்
பயிற்சிக்கான விருப்பமே

உங்களின் இன்றைய
செயல் தான்
உங்களுக்குரிய
நாளைய பொழுது
எது என்பதை
தீர்மானிக்கும்

நான் வெற்றி
அடைவேன் உடனடியாக
இல்லாவிட்டாலும்
உறுதியாக

# வாழ்க்கை தத்துவம்...




நேரம் தான் நம்முடைய
மிகச் சிறந்த ஆசிரியர்
கட்டணம் மட்டும் அதிகம்

நேரம் கற்றுக் கொடுக்கும் பாடம்
நூறு புத்தகங்களை விட
வலிமையானது

வாழ்வு காற்றைப் போல
பிடிக்க முயன்றால் தப்பிவிடும்
அனுபவிக்கத் தெரிந்தால் நிம்மதி தரும்

சுவாசம் இருக்கும் வரை
வாய்ப்புகள் உண்டு
வாழ்வை அழிக்கிறது சோம்பேறித்தனமே

வாழ்வின் அழகு
செல்வத்தில் அல்ல
மனதில் உள்ள அமைதியில் தான்

# "சக்கரத்தின் சாபம்"



அன்று அவன்
காரின் வேகம்,
அவன் வாழ்க்கையின்
வேகத்தைப் போலவே
கட்டுப்பாடின்றி ஓடியது.
ஹார்ன், பிரேக்,
மனிதர்கள்—எதுவும்
அவனுக்குக் கணக்கில்
இல்லை.
சாலையே அவனுக்குச்
சொந்தம் போல.

ஒரு கணம்.

"அம்மா...!"
என்ற சத்தம் காற்றைத்
துளைத்தது.

பிரேக் அடிக்குமுன்,
கார் சக்கரம் ஒரு சிறு
காலின் மேல் ஏறி
இறங்கியது.

சாலை மீண்டும்
அமைதியானது.
அவனுக்குள் மட்டும்
புயல்.

மருத்துவமனை வாசலில்
அவன் தலை குனிந்தபடி
நின்றான்.

"காப்பாத்த முடியலை
சார்...
கால் எடுக்க
வேண்டியதாயிடுச்சு..."

அந்த வார்த்தைகள்
அவன் நெஞ்சில்
சக்கரமாய் உருண்டன.

பணம் இருந்தது.
அதிகாரமும் இருந்தது.
ஆனால்
திரும்பக் கொடுக்க
முடியாதது—
அந்த சிறுவனின் கால்.

அவன் காரை விற்றான்.

அந்த பணத்தில்
சிறுவனுக்குச் செயற்கைக்
கால் செய்துத் தந்தான்.

முதல் முறையாக
அந்தக் கால் தரையில்
பதியும் போது
சிறுவன் சிரித்தான்.

அந்த சிரிப்புக்குள்
அவனுக்கு அழுகை
வந்தது.

சிறுவனின் அம்மா
கேட்டாள்:
"இனிமே காரு
ஓட்டுவீங்களா சார்?"

அவன் மெதுவாகத் தலை
ஆட்டினான்—
இல்லை.

"இனி என் வாழ்க்கையில்
கடைசி வரை
கார் தேவையில்லை.

ஒரு சக்கரம்
ஒரு வாழ்க்கையை
நசுக்கும் வலிமை
உடையதுன்னு
நான்
தெரிஞ்சுக்கிட்டேன்..."

அன்று முதல்
அவன் நடந்தான்.

ஒவ்வொரு அடியும்
ஒரு மன்னிப்பாக.

ஒவ்வொரு வலியும்
ஒரு நினைவாக.

சாலை இன்னும்
நீளமாகத்தான் இருந்தது—
ஆனால்
இப்போது
அவன் மனிதனாய்
பயணித்தான்.

# சிரிப்பு வருது.! சிரிப்பு வருது.!!



"ஏனப்பா கால் கை நல்லாத்தானே இருக்கு, இப்படி உட்கார்ந்து பிச்சை எடுக்கலாமா?"

" 'உடம்பை ரொம்ப அலட்டக்கூடாது'னு டாக்டர் சொல்லிட்டார் சார்"



# தினம் ஒரு சமையல்




## கருணை கிழங்கு வறுவல்

தேவையான பொருட்கள்:

| | |
|---|---|
| கருணை கிழங்கு | 1/2 |
| மிளகாய் தூள் | 1 ஸ்பூன் |
| மல்லி தூள் | 1 ஸ்பூன் |
| கார்ன் மாவு | 4 ஸ்பூன் |
| மஞ்சள் தூள் | 1/2 ஸ்பூன் |
| உப்பு | தேவையான அளவு |
| பொரிக்க ஆயில் | தேவையான அளவு |
| இஞ்சி பூண்டு விழுது | 1 ஸ்பூன் |

செய்முறை:



கருணை கிழங்கு தோல் சீவி குச்சி குச்சி ஆக கட் செய்து கொள்ள வேண்டும்.....


அதனுடன் கான்பிளவர் மாவு இஞ்சி பூண்டு பேஸ்ட் மஞ்சள் தூள் மிளகாய் தூள் மல்லித்தூள் உப்பு அனைத்தையும் நன்றாக சேர்த்துக் கொள்ள வேண்டும்......

இரண்டு அல்லது மூன்று ஸ்பூன் தண்ணீர் விட்டு பிசைந்து கொள்ளவேண்டும் அதிகமாக தண்ணீர் சேர்க்கக் கூடாது

அரை மணி நேரம் அப்படியே ஊறவிட வேண்டும்

அதன் பிறகு எண்ணெயில் பொரித்தெடுக்கவும் கருவேப்பிலை எண்ணெயில் வறுத்து சேர்த்துக் கொள்ளவும் இறுதியாக எலுமிச்சை பிழிந்து விட்டு சாப்பிட்டால் நன்றாக இருக்கும்.....

## மங்குசுத்தான் பயன்கள்



மங்குசுத்தான் (MANGOSTEEN) பழம், ஆன்டிஆக்ஸிடன்ட்கள், நார்ச்சத்து மற்றும் வைட்டமின் சி அதிகம் நிறைந்த ஒரு ஊட்டச்சத்து மிகுந்த பழமாகும். இது நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரித்தல், உடலில் ஏற்படும் அழற்சி மற்றும் வீக்கத்தைக் குறைத்தல், செரிமானத்தை மேம்படுத்துதல், தோல் ஆரோக்கியத்தைப் பாதுகாத்தல் மற்றும் உடல் எடையைக் குறைத்தல் போன்ற பல ஆரோக்கிய நன்மைகளை வழங்குகிறது.

மங்குசுத்தான் பழத்தின் முக்கிய பயன்கள்:

நோய் எதிர்ப்பு சக்தி: வைட்டமின் சி மற்றும் ஆன்டிஆக்ஸிடன்ட்கள் இருப்பதால், இது கிருமிகளை எதிர்த்து போராடி நோய் எதிர்ப்பு சக்தியை வலுப்படுத்துகிறது.

அழற்சி எதிர்ப்பு: உடலில் ஏற்படும் வீக்கம் மற்றும் அழற்சியைக் குறைத்து, மூட்டு வலி மற்றும் நாள்பட்ட நோய்களின் அபாயத்தைக் குறைக்க உதவுகிறது.

செரிமானம் மற்றும் உடல் எடை: அதிக நார்ச்சத்துள்ளதால் மலச்சிக்கலைத் தடுத்து, குடல் ஆரோக்கியத்தை மேம்படுத்துகிறது, மேலும் குறைந்த கலோரி கொண்டதால் எடை மேலாண்மைக்கு உதவுகிறது.

சரும ஆரோக்கியம்: இதில் உள்ள ஆன்டிஆக்ஸிடன்ட்கள் தோல் சுருக்கத்தைக் குறைத்து, சருமத்தை பொலிவாக வைக்க உதவுகிறது.

இதய ஆரோக்கியம்: கெட்ட கொழுப்பைக் குறைத்து, இதய நோய்களின் அபாயத்தைக் குறைக்க உதவுகிறது.

பிற பயன்கள்: புற்றுநோய் செல்களின் வளர்ச்சியைத் தடுக்கும் ஆற்றல், வயிற்றுப் புண், வாய்ப்புண் மற்றும் வாய் துர்நாற்றம் ஆகியவற்றைக் குறைத்தல் போன்ற மருத்துவ குணங்களையும் கொண்டுள்ளது.


மங்குசுத்தான் பழத்தின் சதைப்பகுதி மட்டுமல்லாது, அதன் தோலிலும் (PERICARP) மருத்துவ குணங்கள் உள்ளன. எனினும், ஏதேனும் தீவிர மருத்துவ நிலைகளுக்குப் பயன்படுத்துவதற்கு முன் மருத்துவரை அணுகுவது நல்லது.

தென்கிழக்கு ஆசிய நாடுகளில் பழங்காலத்தில் தோல், பற்களின் ஈறு நோய்கள், பல்வலி, தொற்றுநோய் கிருமிகள், மற்றும் பூஞ்சைகளை அழிக்க மக்கள் பயன்படுத்தினர். அதே போல் காயங்கள், நாள்பட்ட புண்கள், காய்ச்சல், ரத்தம் கலந்த வயிற்று போக்கு, உடல் மற்றும் மன சோர்வு, மன அழுத்தம், கவலை போன்றவற்றை குணமாக்கவும் மங்குஸ்தானைப் பயன்படுத்தி வந்தனர்.

மங்குஸ்தான் பழம், உடல் உள்ளுருப்புகளின் வீக்கத்தைக் குறைக்கவும், புற்று நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கவும், வயதாவதை நிதானப்படுத்தவும், தோல்களின் சுருக்கத்தை கட்டுப்படுத்தவும், பாக்டீரியா வைரஸுக்கு எதிர்ப்பாகவும் பயன்படுகிறது. நார்ச்சத்து மற்றும் விட்டமின் "சி" நிறைந்தது மங்குஸ்தான் பழம்.




# பல வருடங்களுக்கு பின்பு ஷாலினி அஜித் செய்த விஷயம்.. ரசிகர்கள் ஹாப்பி



குழந்தை நட்சத்திரமாக நடித்து பின் முன்னணி கதாநாயகியாக தமிழ் சினிமாவில் வலம் வந்தவர் நடிகை ஷாலினி அஜித். இவர் நடிப்பில் வெளிவந்த அமர்க்களம், அலைபாயுதே, காதலுக்கு மரியாதை, கண்ணுக்குள் நிலவு போன்ற படங்கள் ரசிகர்கள் மனதில் இருந்து நீங்கா இடத்தை பிடித்துள்ளது.

கடந்த 2000ஆம் ஆண்டு, நடிகர் அஜித்தை காதலித்து திருமணம் செய்துகொண்டார். இவர்களுக்கு அனோஷ்கா என்கிற மகளும், ஆதிவிக் என்கிற மகனும் உள்ளனர்.

நடிகர் அஜித் பல ஆண்டுகளாக பத்திரிகையாளர்கள் சந்திப்பு, விருது விழாக்களில் கலந்துகொள்வது என எதிலும் பங்கேற்பது இல்லை. அதை முற்றிலுமாக தவிர்த்து வருகிறார். அதே போல்தான் ஷாலினியும் விருது விழாக்களில் அவர் தலைகாட்டுவதில்லை.

இந்த நிலையில், பல ஆண்டுகளுக்கு பின் நடிகை ஷாலினி அஜித் JFW Movie விருது விழாவில் கலந்து கொண்டுள்ளார். ஷாலினி விருது விழாவில் கலந்து கொண்டுள்ளதை தொடர்ந்து ரசிகர்கள் பலரும், இன்ஸ்டா பக்கத்தில் தங்களது மகிழ்ச்சியை தெரிவித்து வருகிறார்கள்.



அபிநயா அழகாக போஸ் கொடுத்து இருக்கும் லேட்டஸ்ட் போட்டோஷூட் ஸ்டில்கள் இதோ.

# கோடி ரூபாய் கொடுத்தாலும் இந்த விஷயத்தை செய்ய மாட்டேன் - லெஜண்ட் சரவணன்



பிரபல தொழிலதிபர் லெஜண்ட் சரவணன் கடந்த 2022ஆம் ஆண்டு வெளிவந்த லெஜண்ட் படத்தின் மூலம் தமிழ் சினிமாவில் ஹீரோவாக அறிமுகமானார். பெரிதும் எதிர்பார்க்கப்பட்டு வெளிவந்த இப்படம் படுதோல்வியை சந்தித்தது. அதுமட்டுமின்றி கடுமையாக ட்ரோல் செய்யப்பட்டது.

லெஜண்ட் படத்தை தொடர்ந்து அடுத்ததாக லெஜண்ட் சரவணன் யாருடைய இயக்கத்தில் நடிக்கப்போகிறார் என ரசிகர்கள் ஆவலுடன் எதிர்பார்த்து காத்திருந்தனர்.

எதிர்நீச்சல், காக்கி சட்டை, கருடன் போன்ற படங்களை இயக்கிய இயக்குநர் துரை செந்தில்குமாருடன் லெஜண்ட் சரவணன் கைகோர்த்தார். இப்படத்திற்கு லீடர் என தலைப்பு வைக்கப்பட்டுள்ளது. இப்படத்தின் கிலிம்ப்ஸ் வீடியோ சமீபத்தில் வெளிவந்து நல்ல வரவேற்பை பெற்றது.

இந்த நிலையில், சமீபத்தில் நடைபெற்று நடைபெற்ற பத்திரிகையாளர்கள், கோடி ரூபாய் கொடுத்தாலும் இந்த விஷயத்தை செய்ய மாட்டேன் என சிகரெட் பிடிப்பது, மது அருந்துவது குறித்து பேசியிருப்பது இணையத்தில் வைரலாகி வருகிறது.

அவர் கூறியதாவது, "என் வாழ்க்கையில் நான் ஒருபோதும் சிகரெட் பிடித்ததில்லை, மது அருந்தியதில்லை. படங்களிலும் கூட புகைபிடிப்பது போல், மது அருந்துவது போல் நடிக்க மாட்டேன்" என வெளிப்படையாக பேசியுள்ளார்.

# ஐயன் ஐயப்பனின் புகழ் பாடும் 'ஹரிவராசனம்' பாடல் முழுமையான அர்த்தம்!







கார்த்திகை மாதம் பிறந்துவிட்டது. 'எங்கெங்கு காணினும் சக்தியடா' என்பது போல் தற்போது எங்கு பார்த்தாலும் ஐயன் ஐயப்பனை சபரிமலை வந்து தரிசிக்க மாலை அணிந்து கடும் விரதம் மேற்கொண்டு வரும் ஐயப்ப பக்தர்களை காண முடியும். அடுத்து ஒரு மண்டல காலம் வரை எங்கும் ஐயப்ப கோஷமும், அவர் புகழ் பாடும் பாடல்களும் நமது காதுகளில் ரீங்காரமிடும். கல்லிடைக்குறிச்சியை சேர்ந்த கம்பங்குடி சுந்தரம் குளத்து ஐயர் இயற்றி, கே.ஜே. யேசுதாஸ் அவர்களின் இனிமையான குரலில், பெருவாரியான ஐயப்ப பக்தர்கள் விரும்பிக் கேட்டும் பாடலான, 'ஹரிவராசனம்' பாடலின் பொருளை அறிவோம்; பக்தியோடு அதைப் பாடிக் களிப்போம்!

'ஹரிவராசனம்
விஸ்வமோகனம்
ஹரிததீஸ்வரம்
ஆராத்யபாதுகம்
அரிவிமர்த்தனம்
நித்யநர்த்தனம்
ஹரிஹராத்மஜம்
தேவமாஷ்ரயே'

பொருள்: அரியாகிய திருமாலின் ஆசிகள் நிறைந்தவர், பேரண்டத்தை இயக்குபவர், அரியின் அருளின் சாராம்சமாக இருப்பவர், உமது தெய்வீகப் பாதங்களை வணங்குகிறோம். தீய சிந்தனைகளை அழிப்பவரே, இந்த அண்டத்தை ஆள்பவரே, அரி மற்றும் அரனின் புதல்வரே, உங்களைச் சரணடைந்தோம்!

'சரணகீர்த்தனம்
பக்தமானஸம்
பரணலோலுபம்
நர்த்தனாலயம்
அருணபாசுரம்
பூதநாயகம்
ஹரிஹராத்மஜம்
தேவமாஷ்ரயே'

பொருள்: சரண் அடைவோரின் பாடலை விரும்புபவர், பக்தர்களின் மனதில் நிறைந்தவர், பக்தர்களை ஆள்பவர், ஆடலை விரும்புபவர், உதிக்கும் சூரியன் போல பிரகாசிப்பவரே, உயிர்களின் வேந்தரே, அரி மற்றும் அரனின் புதல்வரே உங்களைச் சரணடைந்தோம்!

'பிரணயசத்யகம்
பிராணநாயகம்
ப்ரணதகல்பகம்
சுப்ரபாஞ்சிதம்
பிரணவமந்திரம்
கீர்த்தனப்பிரியம்
ஹரிஹராத்மஜம்
தேவமாஷ்ரயே'

பொருள்: உண்மையின் உணர்வாக இருப்பவர், எல்லா உள்ளங்களின் விருப்பமாக இருப்பவர், பேரண்டத்தைப் படைத்தவர், சுடரொளி வீசும் ஒளிவட்டமாய் திகழ்பவர், 'ஓம்' எனும் மந்திரத்தின் ஆலயம் நீங்கள்; பக்தர்களின் பாடல்களை விரும்புபவர் நீங்கள்; அரி மற்றும் அரனின் புதல்வரே, உங்களைச் சரணடைந்தோம்!

'துரகவாகனம்
சுந்தரானனம்
வரகதாயுதம்
தேவவர்ணிதம்
குருகிருபாகரம்
கீர்த்தனப்பிரியம்
ஹரிஹராத்மஜம்
தேவமாஷ்ரயே'

பொருள்: குதிரையை வாகனமாகக் கொண்டவரே, அழகிய திரு உருவம் கொண்டுள்ளவரே, ஆசிர்வதிக்கப்பட்ட தண்டாயுதத்தை ஏந்துபவர், ஒய்யாரமானவர்; என்னுடைய குரு நீங்கள். பக்தர்களின் பாடல்களை விரும்புபவரே, அரி மற்றும் அரனின் புதல்வரே, உங்களைச் சரணடைந்தோம்!

'திரிபுவனார்ச்சிதம்
தேவதாத்மகம்
திரிநயன பிரபும்
திவ்யதேசிகம்
திரிதசப்பூஜிதம்
சிந்திதப்பிரதம்
ஹரிஹராத்மஜம்
தேவமாஷ்ரயே'

பொருள்: மூவுலகாலும் வணங்கப்படுபவர், கடவுளர்களின் ஆன்மாவாகத் திகழ்பவர், சிவனின் உருவமாக இருப்பவர், தேவர்களால் வணங்கப்படுபவர்; உங்களை தினந்தோறும் மூன்று முறை வணங்குகிறோம். எங்கள் மனம் நிறைந்தவர் நீங்கள்; அரி மற்றும் அரனின் புதல்வரே, உங்களைச் சரணடைந்தோம்!

'பவபயாபகம்
பாவுகாவகம்
புவனமோகனம்
பூதிபூசணம்
தவளவாகனம்
திவ்யவாரணம்
ஹரிஹராத்மஜம்
தேவமாஷ்ரயே'

பொருள்: அச்சத்தை அழிப்பவர், செழிப்பை கொணர்பவர், இந்த அண்டத்தை ஆள்பவர், திருநீற்றை ஆபரணமாக அணிந்தவர், வெள்ளை யானையை வாகனமாகக் கொண்டவர் நீங்கள். அரி மற்றும் அரனின் புதல்வரே, உங்களைச் சரணடைந்தோம்!

'களம்ருதுஸ்மிதம்
சுந்தரானனம்
களபகோமளம்
காத்ரமோகனம்
களபகேசரி
வாஜிவாகனம்
ஹரிஹராத்மஜம்
தேவமாஷ்ரயே'

பொருள்: இனிமையான, மிருதுவான புன்முறுவல் உடையவரே, அழகிய திருமுகத்தை உடையவரே, இளமையும், மென்மையும் உடையவர். சொக்க வைக்கும் பேரழகையும், யானை, சிங்கம், குதிரை போன்றவற்றை வாகனமாகவும் கொண்டவர் நீங்கள். அரி மற்றும் அரனின் புதல்வரே, உங்களைச் சரணடைந்தோம்!

'ச்ரிதஜனப்ரியம்
சிந்திதப்ரிதம்
ச்ருதிவிபூஷணம்
சாதுஜீவனம்
ச்ருதிமனோகரம்
கீதலாலசம்
ஹரிஹராத்மஜம்
தேவமாஷ்ரயே'

பொருள்: பக்தர்களால் நேசிக்கப்படுபவர், பக்தர்களின் வேண்டுதல்களை பூர்த்தி செய்பவர், வேதங்களால் துதிக்கப்படுபவர், ஞானியரை ஆசிர்வதிப்பவர். வேதங்களின் சாராம்சம் நீங்கள்; தெய்வீக இசையை ரசிப்பவர் நீங்கள். அரி மற்றும் அரனின் புதல்வரே, உங்களைச் சரணடைந்தோம்!

பாடலின் பொருளையும் அது கூறும் பெருமையையும் ஆழ்ந்து உணர்ந்து, ஒரு பாடலை பாடும்போதும் அல்லது கேட்கும்போதும் அதன் மூலம் கிடைக்கும் சுகானுபவமே தனிதான் இல்லையா? ஐயன் ஐயப்பன் புகழை உள்ளார்ந்த மகிழ்ச்சியுடன் பாடி பரிபூரணமாக அவனை வணங்குவோம்; நித்தம் நித்தம் அவன் அருளைப் பெறுவோம்! ஓம் ஸ்வாமியே சரணம் ஐயப்பா!




ப.கோபிபச்சமுத்து
பாரதியார் நகர்,
கிருஷ்ணகிரி - 1

# தினம் ஒரு தலைவர்கள் பசந்த குமார் பிஸ்வாஸ் வரலாறு


பசந்த குமார் பிஸ்வாஸ் (6 பிப்ரவரி 1895 - 11 மே 1915) ஜுகந்தர் குழுவில் ஈடுபட்ட ஒரு இந்திய சுதந்திர ஆதரவு ஆர்வலர் ஆவார் , அவர் டிசம்பர் 1912 இல், டெல்லி-லாகூர் சதி என்று அறியப்பட்ட வைஸ்ராயின் அணிவகுப்பில் குண்டுவீச்சு நடத்தியதில் பங்கு வகித்தார் . வங்காளத்திலும் முழு நாட்டிலும் ஆரம்பகால சுதந்திர ஆதரவு ஆர்வலர்களில் பிஸ்வாஸும் ஒருவர் . அவர் வெடிகுண்டு தயாரிப்பதில் நிபுணராக இருந்தார், மேலும் ஜுகந்தர் தலைவர்களான அமரேந்திரநாத் சட்டோபாத்யாயா மற்றும் ராஷ் பிஹாரி போஸ் ஆகியோரால் புரட்சிகர இயக்கத்தில் ஈடுபடுத்தப்பட்டார் .

ஆரம்ப கால வாழ்க்கை பசந்தா குமார் பிஸ்வாஸ், இன்றைய மேற்கு வங்காளத்தின் நாடியா மாவட்டத்தில் உள்ள ஒரு வங்காள இந்து பிரபுத்துவ மகிஷ்ய குடும்பத்தில் , மோதிலால் பிஸ்வாஸ் மற்றும் குஞ்சபாலா தேவி ஆகியோருக்கு 1895 பிப்ரவரி 6 அன்று போராகச்சா கிராமத்தில் பிறந்தார் .



அவரது மூதாதையர் (தாத்தா), திகம்பர் பிஸ்வாஸ், பணப்பயிரை கட்டாயமாக பயிரிடுவதற்கு எதிராக இண்டிகோ கிளர்ச்சியின் ( நீல் பித்ரோஹா, 1859 ) தீவிரத் தலைவராகப் புகழ் பெற்றார், மேலும் சுதந்திரப் போராட்ட வீரர் மன்மதநாத் பிஸ்வாஸ் அவரது உறவினர் ஆவார். சமூக சீர்திருத்தவாதி மற்றும் தொழிலதிபர் ககன் சந்திர பிஸ்வாஸால் நிறுவப்பட்ட அருகிலுள்ள மாதவ்பூர் கிராமத்தில் உள்ள எம்.ஐ. பள்ளியில் தனது பள்ளிப் படிப்பைத் தொடங்கினார் , அவரது உறவினர் மன்மதநாத் பிஸ்வாஸுடன். 1906 ஆம் ஆண்டில், பசந்தா முராகச்சா பள்ளிக்கு மாற்றப்பட்டார் , அங்கு அவர் நுழைவுத் தேர்வு வரை படித்தார் . முராகச்சா பள்ளியின் தலைமை ஆசிரியரான கீரோத் சந்திர கங்குலியின் வழிகாட்டுதலின் கீழ் , பசந்தா தனது சுதந்திரப் போராட்டப் பயணத்தைத் தொடங்கினார்.





ATTENTAT CONTRE LORD HARDINGE, VICE-ROI DES INDES

இந்தப் பள்ளியில் மாணவராக இருந்தபோது, போராகச்சா மற்றும் அதன் சுற்றுப்புறங்களில் நடந்த சுதேசி போராட்டத்தில் தீவிரமாகப் பங்கேற்றார். 1907 ஆம் ஆண்டு, தனது படிப்பை விட்டுவிட்டு, 1910 ஆம் ஆண்டு உத்தர்பராவில் உள்ள ஒரு சுதேசி துணிக்கடையில் வேலை செய்தார், ஆனால் அதை விட்டுவிட்டு இந்தியாவின் பல்வேறு இடங்களுக்குச் சுற்றுப்பயணம் மேற்கொண்டார். அவர் பூரிக்குச் சென்று , இறுதியில் பனாரஸுக்குச் சென்று , அங்கு ராமகிருஷ்ணா மிஷனில் தங்கினார் . அடுத்த ஆண்டு அவர் டேராடூனில் ராஷ் பிஹாரி போஸைச் சந்தித்தார் , அவரால் பணியமர்த்தப்பட்டார். போஸ் அவருக்கு ஆயுதங்கள் மற்றும் குண்டுகளில் பயிற்சி அளித்தார், மேலும் அவரை அன்பாக பிஷே என்று அடிக்கடி அழைத்தார் .

நாடியாவின் போராகச்சாவில் உள்ள பசந்த குமார் பிஸ்வாஸின் பிறந்த இடத்திற்கு அருகில் அவரது நினைவுச்சின்னம்

புரட்சிகர நடவடிக்கைகள் பசந்த குமார் பிஸ்வாஸ், ஜுகந்தர் குழுவில் உறுப்பினராக இருந்தார் , அவரது அமைப்புத் திறமைகளுக்கு பெயர் பெற்றவர் மற்றும் கல்கத்தா ஜுகந்தர் அலுவலகத்திற்கும் சந்தன்நகரில் உள்ள 'சக சதிகாரர்களுக்கும்' இடையே ஒரு முக்கியமான இடைத்தரகராக இருந்தார் . டேராடூனில் ராஷ் பிஹாரி போஸைச் சந்தித்த பிறகு, அவர் அரசியல் ரீதியாகப் பயிற்றுவிக்கப்பட்டார் மற்றும் அவரது பணியை நிறைவேற்றுவதற்கான நடைமுறை பயிற்சிகளைக் கற்றுக்கொண்டார். 1912 அக்டோபரில் போஸால் லாகூருக்கு அழைத்து வரப்பட்டு, அங்கு தனது பஞ்சாபி கூட்டாளிகளுடன் தங்கினார். லாகூரில் அவர் ஒரு பிரபலமான மருந்தகத்தில் ஒரு கம்பவுண்டராகப் பணியாற்றினார். இந்தியாவின் வைஸ்ராயாக இருந்த லார்ட் ஹார்டிங்கின் மீது குண்டு வீசும் சதியில் பிஸ்வாஸ் பங்கேற்றார் . 1912 டிசம்பர் 23 அன்று, டெல்லி இந்தியாவின் தலைநகராக பதவியேற்றதைக் குறிக்கும் ஒரு மாநில ஊர்வலத்தில் லார்ட் ஹார்டிங்க் டெல்லியின் சாந்தினி சவுக் வழியாகச் சென்றபோது, இது அவரால் மேற்கொள்ளப்பட்டது. பெண்கள் உடையில், பெண்களுக்கு ஒதுக்கப்பட்ட வைஸ்ராயின் பாதையை நோக்கிய ஒரு கூரைக்குச் சென்றார்.

அவர் மற்ற பார்வையாளர்களுக்கு லட்சுமிபாய் என்று அறிமுகப்படுத்திக் கொண்டார் - இது ஜான்சியின் பிரபலமான ராணியைக் குறிக்கிறது . ஊர்வலம் பிஸ்வாஸ் காத்திருந்த கூரை வழியாகச் சென்று கொண்டிருந்தபோது, ஒரு குண்டு கீழே விழுந்து வைஸ்ராயின் பின்னால் வெடித்தது. ஹார்டிங்க் பலத்த காயமடைந்தார், அவருக்குப் பின்னால் இருந்த வேலைக்காரன் தனது குடையாணியைப் பிடித்திருந்தான். தனது வேலை முடிந்தவுடன் பசந்தா தெருவில் இறங்கி தனது சேலையைக் கழற்றி கூட்டத்திற்குள் மறைந்தார். அவர் பஞ்சாபிற்குத் திரும்பினார், அங்கு அவர் தனது புரட்சிகர நடவடிக்கைகளை மேற்கொண்டார். மாநிலத்தின் தீவிர விசாரணை மற்றும் இலாபகரமான வெகுமதி இருந்தபோதிலும், பத்திரத்தின் ஆசிரியர்கள் பல மாதங்களாக தெளிவற்றவர்களாகவே இருந்தனர்.

பிஸ்வாஸ் 1914 பிப்ரவரி 26 அன்று நாடியாவின் போராகச்சாவில் தனது தந்தையின் இறுதிச் சடங்குகளைச் செய்யச் சென்றபோது கைது செய்யப்பட்டார்.

1913 மே 17 அன்று லாகூரில் உள்ள லாரன்ஸ் கார்டனில் குண்டு வீசியதாகவும், அதில் ஒரு பியூன் கொல்லப்பட்டதாகவும் அவர் மீது குற்றம் சாட்டப்பட்டது. டெல்லி-லாகூர் சதி வழக்கு என்று அழைக்கப்பட்ட இந்த வழக்கு விசாரணை 1914 மே 23 அன்று டெல்லியில் தொடங்கியது; அமீர் சந்த் , அபாத் பெஹாரி மற்றும் பாய் பால்முகுந்த் ஆகியோருக்கு விசாரணையில் மரண தண்டனை விதிக்கப்பட்டது, மேலும் பசந்தா பிஸ்வாஸ் குற்றவாளி என நிரூபிக்கப்பட்டது, ஆனால் ஆரம்பத்தில் அவருக்கு பதினேழு வயது மட்டுமே என்பதால் ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டது.

வைஸ்ராய் ஹார்டிங் மீது பிஸ்வாஸால் படுகொலை முயற்சி லாகூர் உயர் நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யப்பட்டது . அரசர் தனது மேல்முறையீட்டை வென்றார், பிஸ்வாஸுக்கு தூக்கிலிட தண்டனை விதிக்கப்பட்டது.

பசந்த குமார் பிஸ்வாஸ் 1915 மே 11 அன்று பஞ்சாபில் உள்ள அம்பாலா மத்திய சிறையில் இருபது வயதில் தூக்கிலிடப்பட்டார் , மேலும் 20 ஆம் நூற்றாண்டில் இந்திய புரட்சிகர போராட்டங்களின் போது தூக்கிலிடப்பட்ட இளையவர்களில் ஒருவரானார்.

நாடியாவில் உள்ள ஒரு பள்ளியில் பசந்தா பிஸ்வாஸின் சிலை ஜப்பானின் டோக்கியோவில் உள்ள ஒரு பூங்காவில் ராஸ்பிஹாரி பாசுவால் பசந்தா பிஸ்வாஸின் சிலை நிறுவப்பட்டுள்ளது . மற்றொரு சிலை நதியாவின் கிருஷ்ணாநகரில் உள்ள ரவீந்திர பவன் முன் அமைந்துள்ளது . டெல்லியின் சிவில் லைன்ஸில் உள்ள ஒரு பள்ளிக்கு அவரது நினைவாக "ஷாஹீத் பசந்த் குமார் பிஸ்வாஸ் சர்வோதய வித்யாலயா" என்று பெயரிடப்பட்டது.

பின்னர் அது ராஜ்கியா பிரதிபா விகாஸ் வித்யாலயா என மறுபெயரிடப்பட்டது . மக்களவை சபாநாயகர் மீரா குமார் இந்திய நாடாளுமன்ற அருங்காட்சியகத்தில் பசந்தா குமாரின் புகைப்படத்தை நிறுவியுள்ளார் .

இந்திய அரசியல்வாதியும் மேற்கு வங்க அரசாங்கத்தில் தற்போதைய அமைச்சருமான உஜ்ஜல் பிஸ்வாஸ் , பசந்தா பிஸ்வாஸின் குடும்பத்தைச் சேர்ந்தவர்.

அமைச்சர் கடந்த 30 ஆண்டுகளாக பிப்ரவரி மாதத்தில் தனது கிராம வீட்டில் பசந்தா மேளா என்ற மூன்று நாள் கண்காட்சியை ஏற்பாடு செய்து வருகிறார் .

# வாக்குச்சாவடி சீட்டு விநியோகம்: தேர்தல் ஆணையம் அறிவுறுத்தல்




**புதுடெல்லி, பிப்.10:**

மேற்கு வங்கத்தில் வாக்காளர்களுக்கு வாக்குச்சாவடி சீட்டு (பூத் ஸ்லிப்) விநியோகிப்பது தொடர்பாக வாக்குச்சாவடி அலுவலர்களுக்கு பல்வேறு அறிவுரைகளை இந்திய தேர்தல் ஆணையம் வழங்கியுள்ளது.

மேற்கு வங்கத்தில் விரைவில் பேரவைத் தேர்தல் நடைபெறவுள்ள நிலையில் விதிகளுக்கு உள்பட்டு வாக்காளர்களுக்கு வீடு வீடாகச் சென்று வாக்குச்சாவடி சீட்டு விநியோகிக்க வாக்குச்சாவடி நிலை அலுவலர்களுக்கு (பிஎல்ஓ) தேர்தல் ஆணையம் உத்தரவிட்டுள்ளது.

இதுகுறித்து அதிகாரி ஒருவர் பிடிஐ செய்தி நிறுவனத்துக்கு அளித்த பேட்டியில், 'வாக்காளர்களின் பெயர், வயது, முகவரி, வாக்காளர் புகைப்பட அடையாள அட்டை எண், பகுதி எண், பூத் எண், வாக்குச்சாவடி உள்ளிட்ட அனைத்துத் தகவல்களும் வாக்குச்சாவடி சீட்டில் இடம்பெற்றிருக்க வேண்டும். தேர்தல் ஆணையத்தின் சின்னமும் இருக்க வேண்டும்.

தங்களுக்கு பிஎல்ஓ வாக்குச்சாவடி சீட்டை வழங்கவில்லை என்றால் தேர்தல் ஆணையத்தின் உதவி எண்ணை அழைத்து சம்பந்தப்பட்ட வாக்காளர் புகாரளிக்கலாம். புகார் பெறப்பட்ட 24 மணி நேரத்தில் வாக்குச்சாவடி சீட்டு விநியோகிக்காத பிஎல்ஓ மீது நடவடிக்கை எடுக்கப்படும்' என்றார்.

# 50 லட்சம் பயனர்களைக் கடந்த 'ஃபாஸ்டேக் வருடாந்திர பாஸ்'

**புதுடெல்லி, பிப்.10:**



தேசிய நெடுஞ்சாலைகளில் தொடர்ச்சியாக பயணம் செய்யும் வாகன ஓட்டிகளுக்காக அறிமுகப்படுத்தப்பட்ட 'ஃபாஸ்டேக் வருடாந்திர பாஸ்' திட்டத்தைப் பயன்படுத்துவோரின் எண்ணிக்கை 50 லட்சத்தைக் கடந்துள்ளது.

மத்திய சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சகத்தால் கடந்த ஆண்டு சுதந்திர தினத்தில் தொடங்கப்பட்ட இத்திட்டத்தில் வெறும் 6 மாதங்களில் 50 லட்சம் போ இணைந்துள்ளனர். இந்தக் குறுகிய காலகட்டத்திலேயே சுமார் 26.55 கோடி முறை சுங்கச்சாவடி பரிவர்த்தனைகள் இத்திட்டத்தின் மூலம் நடந்துள்ளன.

இத்திட்டத்தின் சிறப்பம்சமான, ஒருமுறை கட்டணமாக ரூ.3,000 மட்டும் செலுத்திவிட்டு, ஆண்டு முழுவதும் அல்லது மொத்தம் 200 முறை சுங்கச்சாவடிகளை எவ்வித கூடுதல் கட்டணமுமின்றி கடக்கலாம்.

'ராஜ்மார்க்கயாத்ரா' செயலி அல்லது இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தின் (என்எச்ஏஐ) வலைதளம் மூலம் இத்திட்டத்தில் இணையலாம். நாடு முழுவதும் உள்ள சுமார் 1,150 சுங்கச்சாவடிகளில் இந்த வசதி செல்லுபடியாகும்.

நெடுஞ்சாலைகளில் அவ்வப்போது பயணம் செய்யும் வணிக ரீதியல்லாத சொந்த வாகன உரிமையாளர்களுக்கு இது பெரும் பண சேமிப்பை வழங்குகிறது.

தில்லி - என்சிஆர் பகுதியில் உள்ள பிஜ்வாசன் சுங்கச்சாவடியில் 57 சதவீத வாகனங்கள் இந்தப் பாஸ் மூலமே பயணிப்பதாகத் தரவுகள் தெரிவிக்கின்றன. பழைய ஃபாஸ்டேக் கணக்குடன் இதை இணைக்க முடியும் என்பதால், பொதுமக்களிடையே இதற்கு அதிக வரவேற்பு உள்ளது.

### 2-ஆம் இடத்தில் தமிழகம்

இந்த வருடாந்திர பாஸ் பயன்பாட்டில் மாநில வாரியான புள்ளிவிவரங்களின்படி, சண்டீகர் 14 சதவீதப் பங்களிப்புடன் முதலிடத்தில் உள்ளது. இதைத் தொடர்ந்து, தமிழகம் 12.3 சதவீதத்துடன் இரண்டாம் இடத்திலும், தில்லி 11.5 சதவீதத்துடன் மூன்றாம் இடத்திலும் உள்ளன.

# மணிப்பூர்: 4 பயங்கரவாதிகள் கைது

**இம்பால், பிப்.10:**

மணிப்பூரில் 2023ம் ஆண்டு இரு இனக்குழுக்களுக்கு இடையேமோதல்வெடித்தது. இந்த மோதல் வன்முறையாக மாறியதையடுத்து அம்மாநிலத்தில் ஜனாதிபதி ஆட்சி அமல்படுத்தப்பட்டது. பின்னர், ராணுவம் குவிக்கப்பட்டு வன்முறை கட்டுக்கொள் கொண்டுவரப்பட்டது. மேலும், 2 ஆண்டுகளாக அமலில் இருந்த ஜனாதிபதி ஆட்சி கடந்த சில நாட்களுக்குமுன் விலக்கிக்கொள்ளப்பட்டது.

அதேவேளை, மணிப்பூரில் பயங்கரவாத அமைப்புகளுடன் தொடர்புடையவர்களை கைது செய்யும் நடவடிக்கையிலும் பாதுகாப்புப்படையினர் இறங்கியுள்ளார். இந்நிலையில், மணிப்பூரில் இன்று 4 பயங்கரவாதிகள் கைது செய்யப்பட்டனர். அம்மாநிலத்தின் டென்கொபல் , இம்பால் கிழக்கு மற்றும் மேற்கு, கக்சிங் ஆகிய மாவட்டங்களில் பதுங்கி இருந்த 4 பயங்கரவாதிகளை பாதுகாப்புப்படையினர் கைது செய்தனர். மேலும், கண்ணிவெடி, பீரங்கி குண்டு உள்ளிட்ட ஆயுதங்களையும் பாதுகாப்புப்படையினர் பறிமுதல் செய்தனர்.

# கர்நாடகா: சிறிய ரக விமானம் வயலில் விழுந்து விபத்து - 2 பேர் படுகாயம்



**பெங்களூரு, பிப்.10:**

கர்நாடக மாநிலம் விஜயவாடாவில் தனியார் விமான பயிற்சி நிறுவனம் உள்ளது. இந்நிறுவனத்திற்கு சொந்தமான சிறிய ரக விமானத்தில் விமானியும், பயிற்சி விமானியும் வழக்கமான பயிற்சி மேற்கொண்டனர்.

விமானம் நடுவானில் பறந்துகொண்டிருந்தபோது திடீரென எஞ்சினில் கோளாறு ஏற்பட்டது. இதனால் அதிர்ச்சியடைந்த விமானி விமானத்தை உடனடியாக தரையிறக்க முயற்சித்தார். ஆனால், விமானம் விஜயவாடா அருகே உள்ள கிராமத்தின் வயல்வெளியில் விழுந்து விபத்துக்குள்ளானது. இந்த விபத்தில் விமானத்தில் பயணித்த 2 பேரும் படுகாயமடைந்தனர். தகவலறிந்து விரைந்து சென்ற போலீசார், காயமடைந்த 2 பேரையும் மீட்டு சிகிச்சைக்காக அருகில் உள்ள மருத்துவமனையில் அனுமதித்தனர். மேலும், இந்த விபத்து குறித்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# ராஜஸ்தான்: அடுக்குமாடி கட்டிடம் இடிந்து விபத்து - 2 பேர் பலி

**ஜெய்ப்பூர், பிப்.10:**

ராஜஸ்தான் மாநிலம் கோட்டா மாவட்டம் தல்வாண்டி பகுதியில் 3 மாடிகளை கொண்ட அடுக்குமாடி கட்டிடம் உள்ளது. இந்த கட்டிடத்தில் ஓட்டல் செயல்பட்டு வந்தது.

இந்நிலையில், ஓட்டலில் 7ம் தேதி இரவு ஊழியர்கள், வாடிக்கையாளர்கள் இருந்தனர். அப்போது, திடீரென அந்த அடுக்குமாடி கட்டிடம் இடிந்து விழுந்தது. இதில், ஓட்டலில் இருந்த 15 பேர் இடிபாடுகளில் சிக்கிக்கொண்டனர். தகவலறிந்து விரைந்து சென்ற போலீசார் இடிபாடுகளில் சிக்கிய 15 பேரையும் மீட்டு அருகில் உள்ள மருத்துவமனையில் சிகிச்சைக்கு அனுமதித்தனர். அங்கு அனைவருக்கும் தீவிர சிகிச்சை அளிக்கப்பட்ட நிலையில் படுகாயமடைந்தவர்களில் ஆரியன் , லக்ஷ்மன் ஆகிய 2 பேர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தனர். இந்த சம்பவம் தொடர்பாக போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# துபாய் நகைக் கடை பகுதியில் உலகின் முதல் தங்கச் சாலை

**துபாய், பிப்.10:**

ஐக்கிய அரபு அமீரகத்தில் உள்ள துபாய் கோல்ட் மாவட்டம் கோல்ட் சவுக் பகுதியில் 1,000-க்கும் மேற் பட்ட தங்க நகைக்கடைகள் அமைந்துள்ளன. இதன் அருகில் உள்ள தியரா பகுதியிலும் தங்கம் தொடர்பான வர்த்தகம்தான் நடைபெறுகிறது. துபாய் வர்த்தகம் மற்றும் பாரம்பரியத்தில் தங்கம் முக்கிய பங்கு வகிக்கிறது.

கடந்த 2024-25-ம் நிதியாண்டில் ஐக்கிய அரபு அமீரகம் 53.41 பில்லியன் அமெரிக்க டாலர் (ரூ.4 லட்சத்து 84 ஆயிரம் கோடி) மதிப்பிலான தங்க நகைகளை ஏற்றுமதி செய்துள்ளது. இது தவிர முதலீடு சேவைகள் நிறுவனங்கள் மற்றும் ஆடம்பர பொருட்கள் விற்பனையும் இங்கு நடைபெறுகிறது.

இந்தியா, சுவிட்சர்லாந்து, இங்கிலாந்து, ஹாங்காங், துருக்கி உட்பட உலகின் பல நாடுகளில் இருந்து தங்கநகை வியாபாரிகளும், சுற்றுலாப் பயணிகளும் வந்து செல்லும் இப்பகுதியில் தங்கத்தில் சாலை அமைக்கும் திட்டத்தை துபாய் அதிகாரிகள் அறிவித்துள்ளனர். சர்வதேச பார்வையாளர்கள், முதலீட்டாளர்களை ஈர்ப்பதற்காக இத்திட்டம் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த சாலை அமைப்பதற்கான கட்டுமான விவரங்கள், காலக்கெடு ஆகியவை படிப்படியாக அறிவிக்கப்படவுள்ளன. இங்கு தங்கச் சாலை அமைக்கப்பட்டால், இது உலகின் முதல் தங்கச் சாலையாக இருக்கும்.

# ஹரியாணா ராட்டின விபத்தில் பலியான ஆய்வாளர் காவலர் பதக்கம் வென்றவர்

**புதுடெல்லி, பிப்.10:**



ஹரியாணா ராட்டின விபத்தில் பலியான காவல் ஆய்வாளர் 2020 இல் காவலர் பதக்கம் வென்றவர் எனத் தெரிய வந்துள்ளது.

58 வயதான காவல் ஆய்வாளர் ஜகதீஷ் பிரசாத், 2019-20 ஆம் ஆண்டில் ஹரியாணா ஆளுநரிடமிருந்து காவலர் பதக்கம் பெற்றவர். 1989 ஆம் ஆண்டு ஹரியாணா ஆயுத படையில் சேர்ந்த பிரசாத், 36 ஆண்டுகள் பணியில் இருந்து வந்துள்ளார்.

வரும் மார்ச் மாதத்துடன் ஓய்வு பெறவிருந்த நிலையில் நேற்று ஏற்பட்ட ராட்டின விபத்தில் பலியானது குறிப்பிடத்தக்கது. இதனிடையே பலியான ஆய்வாளரின் குடும்பத்தினருக்கு ரூ.1 கோடி இழப்பீடும், குடும்பத்தில் ஒருவருக்கு அரசு வேலையும் வழங்கப்படும் என்று அம்மாநில டிஜிபி அஜய் சிங்கால் தெரிவித்துள்ளார்.

அதேசமயம், விபத்தில் காயமடைந்தவர்கள் தற்போது ஆபத்தில் இருந்து மீண்டுவிட்டதாக சுற்றுலா அமைச்சர் அரவிந்த் சர்மா தெரிவித்தார். ஹரியாணா மாநிலம், சூரஜ்குண்ட் கண்காட்சியில் சனிக்கிழமை ராட்சத ராட்டினம் திடீரென சரிந்து விபத்துக்குள்ளானது. இந்த சம்பவத்தில் பணியில் இருந்த காவல் அதிகாரி ஒருவர் பலியானார்.

மேலும் 13 பேர் காயமடைந்தனர். விபத்து தொடர்பான விடியோக்கள் இணையதளங்களில் வைரலாகி வருகிறது. தகவல் கிடைத்ததும் மாவட்ட துணை ஆணையர் ஆயுஷ் சின்ஹா, சுற்றுலா மேலாண்மை இயக்குனர் பார்த் குப்தா ஆகியோர் உடனடியாக சம்பவ இடத்திற்கு வந்தனர்.

மாலை 6 மணியளவில் சுமார் 15 பேருடன் ராட்டினம் திடீரென சரிந்ததாக போலீஸார் தெரிவித்தனர்.

# நீட் தேர்வு தேதி அறிவிப்பு!

**புதுடெல்லி, பிப்.10:**



இளநிலை நீட் தேர்வுக்கான இணையவழி விண்ணப்பப் பதிவு இன்று(பிப். 8 ) முதல் தொடங்கப்படும் என்று தேசிய தேர்வு முகமை(NTA) அறிவித்துள்ளது.

நாடு முழுவதும் அரசு மற்றும் தனியார் மருத்துவக் கல்லூரிகளின் எம்பிபிஎஸ், பிடிஎஸ் படிப்புகள் மற்றும் சித்தா, ஆயுர்வேதா, யுனானி, ஹோமியோபதி படிப்புகள் மற்றும் கால்நடை மருத்துவப் படிப்பின் அகில இந்திய ஒதுக்கீட்டு இடங்களுக்கு நீட் தேர்வு மூலம் மாணவர் சேர்க்கை நடத்தப்படுகிறது. அதேபோன்று, ராணுவக் கல்லூரிகளில் பிஎஸ்சி நர்சிங் படிப்புக்கு நீட் தேர்வு கட்டாயமாக்கப்பட்டுள்ளது. நீட் தேர்வை தேசிய தேர்வுகள் முகமை (என்டிஏ) ஆண்டுதோறும் நடத்தி வருகிறது. அதன்படி, 2026-27-ஆம் கல்வியாண்டுக்கான நீட் தேர்வு வரும் மே 3-ஆம் தேதி நாடு முழுவதும் நடைபெற உள்ளது. தமிழ், ஆங்கிலம், ஹிந்தி உள்பட 13 மொழிகளில் நடைபெறும் இந்தத் தேர்வுக்கான இணையதள விண்ணப்பப் பதிவு இன்று(பிப். 8) தொடங்கியுள்ளது. இதற்கான கால அவகாசம் மார்ச் 8-ஆம் தேதி நிறைவு பெறவுள்ளது. இதையடுத்து விருப்பமுள்ள மாணவர்கள் HTTPS://NEET.NTA.NIC.IN என்ற இணையதளம் வழியாக விண்ணப்பிக்கலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. தேர்வுக்கு விண்ணப்பிக்கும் வழிமுறைகள், கட்டணம் உள்ளிட்ட தகவல்களை மின்னஞ்சல் வாயிலாகவோ, 011 40759000 என்ற தொலைபேசி எண்ணிலோ அறிந்து கொள்ளலாம் என தேசிய தேர்வு முகமை தெரிவித்துள்ளது.

நீட் தேர்வுக்கான கட்டணம் பொதுப்பிரிவுக்கு ரூ.1700, பிற்படுத்தப்பட்டோருக்கு ரூ.1600, எஸ்சி - எஸ்டி பிரிவுக்கு ரூ.1000 என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதனுடன் ஜிஎஸ்டி மற்றும் சேவைக் கட்டணம் கூடுதலாக வசூலிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பாகிஸ்தான் மசூதியில் குண்டுவெடிப்பு துரதிருஷ்டவசமானது: ஃபரூக் அப்துல்லா

**புதுடெல்லி, பிப்.10:**



பாகிஸ்தான் மசூதியில் குண்டுவெடிப்பு துரதிருஷ்டவசமானது என்று ஃபரூக் அப்துல்லா தெரிவித்தார்.

முகமது ரியாஸ் ஹமதனியின் தாயார் மறைவுக்கு இரங்கல் தெரிவிப்பதற்காக தெற்கு காஷ்மீர் நகரத்திற்கு தேசிய மாநாட்டுக் கட்சி தலைவர் ஃபரூக் அப்துல்லா ஞாயிற்றுக்கிழமை சென்றிருந்தார்.

அப்போது ஜம்மு-காஷ்மீரின் புல்வாமா மாவட்டத்தின் பாம்போர் நகரில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், மசூதிகளுக்குள்ளும் இப்போது குண்டுவெடிப்புகள் நடப்பது துரதிருஷ்டவசமானது.

நாம் அல்லாஹ்விடமிருந்து எவ்வளவு தூரம் விலகிச் சென்றுவிட்டோம் என்பதை இது காட்டுகிறது. இவ்வாறு அவர் குறிப்பிட்டார். தொடர்ந்து, பாகிஸ்தானை ஒரு பயங்கரவாத நாடாக அறிவிக்க வேண்டுமா என்று கேட்கப்பட்ட கேள்விக்கு, ஃபரூக் அப்துல்லா கருத்து கூற மறுத்துவிட்டார். பாகிஸ்தான் தலைநகர் இஸ்லாமாபாதில் உள்ள ஷியா மசூதியில் வெள்ளிக்கிழமை தொழுகையின்போது, வெடிகுண்டு மூலம் தற்கொலைப் படைத்தாக்குதல் நடத்தப்பட்டது. இந்தத் தாக்குதலில் 36 பேர் பலியான நிலையில், 160-க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். இதனைத் தொடர்ந்து, தாக்குதலுக்கு மூளையாகச் செயல்பட்டவர் என்று கூறப்படுபவர் உள்பட 4 பேர் கைது செய்யப்பட்டனர்.

இதனிடையே, ஷியா மசூதியில் நடத்தப்பட்ட தாக்குதலுக்கு டேஷ் அமைப்பின் கிளை அமைப்பு பொறுப்பேற்றுள்ளது.

# மகரமேளாவில் பெண் துறவிகள் மீது தாக்குதல்: உ.பி. காவல் துறைக்கு மகளிர் ஆணையம் நோட்டீஸ்

**புதுடெல்லி, பிப்.10:**

மகரமேளாவில் பெண் துறவிகள் தாக்கப்பட்டதாகத் தகவல் வெளியானதைத் தொடர்ந்து, உ.பி. காவல் துறைக்கு தேசிய மகளிர் ஆணையம் நோட்டீஸ் அனுப்பி உள்ளது.

உ.பி. யின் பிரயாக்ராஜ் திரிவேணி சங்கமத்தில் மகர மேளா நடைபெற்று வருகிறது. இங்கு கடந்த மவுனி அமாவாசை தினத்தில் புனித குளியலின் போது உத்தராகண்டின் ஜோதிஷ்வர் பீடத்தின் சங்கராச்சாரியார் சுவாமி அவிமுக்தேஷ்வரானந்தாவும் புனித நீராட கிளம்பினார்.

அப்போது பல்லக்கில் சென்றவரை இறங்கி நடந்து செல்லுமாறு உ.பி. நிர்வாகம் வலியுறுத்தியது. சங்கராச்சாரியார் பட்டம் தொடர்பான வழக்கு நீதிமன்றத்தில் இருப்பதால் அந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டதாக காவல் துறையினர் கூறினர். இதனால் காவலர்களுக்கும் சங்கராச்சாரியாரின் பக்தர்களுக்கும் இடையே வாக்குவாதமும் மோதலும் நிகழ்ந்தன.

அதில், சங்கராச்சாரியாரின் பக்தர்கள் பெண் துறவிகளும் தாக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. சுமார் 20 பெண் துறவிகள் மீது காவல் துறையினர் தாக்குதல் நடத்தியதாக புகார் எழுந்தது. காயம் அடைந்த சிலர் மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்றுள்ளனர்.

பாதிக்கப்பட்ட பெண் துறவிகளில் பூஜா (40), ஜெய் தேவி பாண்டே (50), அர்ச்சனா தேவி (61), மம்தா பரோஹா (60), கமலா பரத்வாஜ் (60), ஜோதி கார்க்(39), ஸ்வேதா சுக்லா (25) ஆகியோர் முக்கியமானவர்கள்.

இதுதொடர்பாக அலகாபாத் உயர் நீதிமன்ற வழக்கறிஞர் டாக்டர் கஜேந்திர சிங் யாதவ், தேசிய மகளிர் ஆணையத்தில் புகார் செய்தார்.

இதையடுத்து, பெண் துறவிகள் தாக்கப்பட்டது குறித்து விசாரணை நடத்தி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பிரயாக்ராஜ் காவல் துறை ஆணையருக்கு மகளிர் ஆணையம் நோட்டீஸ அனுப்பி உள்ளது. அதில், 30 நாட்களுக்குள் நடவடிக்கை எடுத்து பதில் அளிக்க வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.

# அரசியல் உள்நோக்கம் கொண்டது - டெல்லி நீதிமன்றத்தில் சோனியா காந்தி பதில்

**புதுடெல்லி, பிப்.10:**



வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்தது தொடர்பான புகார், அரசியல் உள்நோக்கம் கொண்டது என்று டெல்லி நீதிமன்றத்தில் சோனியா காந்தி பதில் அளித்துள்ளார்.

காங்கிரஸ் முன்னாள் தலைவர் சோனியா காந்தி, இந்திய குடியுரிமை பெறுவதற்கு முன்பே தனது பெயரை முறைகேடாக வாக்காளர் பட்டியலில் சேர்த்ததாகக் கூறி, வழக்கறிஞர் விகாஸ் திரிபாதி தாக்கல் செய்த மனுவை டெல்லி மாஜிஸ்திரேட் நீதிமன்றம் கடந்த ஆண்டு செப்டம்பர் மாதம் தள்ளுபடி செய்தது.

இதை எதிர்த்து டெல்லி ரோஸ் அவென்யூ நீதிமன்றத்தில் திரிபாதி சீராய்வு மனு தாக்கல் செய்திருந்தார். அந்த மனுவுக்கு பதில் அளிக்குமாறு சோனியா காந்திக்கு நீதிமன்றம் உத்தரவிட்டது.

இதன் படி, சோனியா காந்தி தாக்கல் செய்த பதில் மனுவில், "வாக்காளர் பட்டியலில் எனது பெயர் முறைகேடாக சேர்க்கப்படிருப்பதாகக் கூறுவது தவறானது. இந்தப் புகார் அடிப்படை ஆதாரமற்றது. அரசியல் உள்நோக்கம் கொண்டது மற்றும் தவறாக வழிநடத்துவது" என்று கூறியுள்ளார்.

# ராஜஸ்தானில் ஓடும் எக்ஸ்பிரஸ் ரயிலில் திடீர் தீ விபத்து

**புதுடெல்லி, பிப்.10:**

ராஜஸ்தானின் ஜெய்சால்மரில் ஓடும் எக்ஸ்பிரஸ் ரயிலில் தி விபத்து ஏற்பட்டதால் பரபரப்பு நிலவியது. டில்லியில் இருந்து ஜெய்சால்மருக்கு சென்றுகொண்டிருந்த ஸ்வர்ன் நகரி எக்ஸ்பிரஸ் ரயில் பெட்டியின் அடியில் ஞாயிற்றுக்கிழமை திடீர் தீ விபத்து ஏற்பட்டது. ஆபத்தை உணர்ந்த லோகோ பைலட் உடனடியாக ரயிலை பாதுகாப்பான இடத்தில் நிறுத்தினார்.

ரயில் நின்றவுடன், ரயில்வே ஊழியர்கள் உடனடியாக தீயை அணைக்கத் தொடங்கினர். தீயணைப்பு கருவிகள் மற்றும் பிற பொருள்களைக் கொண்டு ஊழியர்கள் சிறிது நேரத்திற்குள் தீயைக் கட்டுக்குள் கொண்டு வந்தனர். இந்த சம்பவத்தில் எந்த உயிரிழப்பும் ஏற்படவில்லை என்று அதிகாரிகள் குறிப்பிட்டனர். தீ அணைக்கப்பட்ட பிறகு, ரயில் மீண்டும் ஜெய்சால்மருக்குச் சென்றது என்று அதிகாரி மேலும் கூறினார். தீ விபத்துக்கான காரணம் இன்னும் கண்டறியப்படவில்லை. இருப்பினும் இதுகுறித்து விசாரணை தொடங்கப்பட்டுள்ளது.




## நெல்லையில் வீட்டில் பிரசவம் பார்த்ததால் குழந்தை இறந்தது - தந்தையை கைது செய்த போலீஸார்



**நெல்லை, பிப்.10:** மேலப்பாளையத்தில் வீட்டில் பிரசவம் பார்த்ததில் குழந்தை இறந்து பிறந்த விவகாரத்தில் நசிம் உசேன் (35) என்பவரை போலீஸார் கைது செய்துள்ளனர்.

மேலப்பாளையம் தெற்கு தைக்கா தெருவை சேர்ந்த நியாஸ் அலி மகன் நசிம் உசேன். இவரது மனைவி நிறைமாத கர்ப்பிணியாக இருந்துள்ளார். அவருக்கு பிரசவ தேதி நெருங்கிய நிலையில், அவரை மேலப்பாளையம் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்துக்கு மருத்துவ பரிசோதனைக்கு அழைத்து வருமாறு நிலைய மருத்துவர் அறிவுறுத்தியுள்ளார்.

ஆனால், ஆரம்ப சுகாதார நிலையத்துக்கு மனைவியை அழைத்துச் செல்லாமல், நேற்று முன்தினம் இரவில் வீட்டில் வைத்து நசிம் உசேன் பிரசவம் பார்த்துள்ளார். இதில், அவரது மனைவிக்கு ஆண் குழந்தை இறந்த நிலையில் பிறந்தது.

"சிசுவின் உடலை காட்டு ஜும்மா பள்ளிவாசலில் அடக்கம் செய்துள்ளனர்" என, மேலப்பாளையம் அரசு ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவ அலுவலர் சுமதி, மேலப்பாளையம் காவல் நிலையத்தில் புகார் அளித்தார். அதன்பேரில் போலீஸார் வழக்கு பதிந்து, நசிம் உசேனை கைது செய்து விசாரணை நடத்தி வருகிறார்கள்.

## மலையாள நடிகையிடம் ஓட்டல் ஊழியர் அத்துமீறல்




**சென்னை, பிப்.10:** தி.நகரில் உள்ள ஹோட்டலில் தங்கியிருந்த மலையாள நடிகையிடம், ஊழியர் ஒருவர் அத்துமீறிய சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.


கேரள மாநிலம் எர்ணாகுளத்தைச் சேர்ந்த 26 வயதான மலையாள நடிகை ஒருவர. சென்னை தி.நகர் தாமஸ் சாலையில் உள்ள ஹோட்டலில் ஒரு மாதம் தங்குவதற்காக அறை எடுத்திருந்தார். இந்நிலையில், நேற்று முன்தினம் இரவு, நடிகை உணவு ஆர்டர் செய்ய முயன்ற போது. அங்கிருந்த இண்டர்காம் வேலை செய்ய வில்லை எனத் தெரிகிறது.

இது குறித்து நிர் வாகத்திடம் புகார் அளித் ததைத் தொடர்ந்து, ஆலந்தூரைச் சேர்ந்த 20 வயதான ஊழியர் ஒருவர் இண்டர்காமைச் சரிசெய்ய நடிகையின் அறைக்குச் சென்றுள்ளார். இண்டர்காமை சரி செய்த பின், அந்த ஊழியர் நடிகையிடம், 'நீங்கள் மலையாள நடிகை தானே? என்று கேட்டு அவரைத் தொட்டு தொல்லை கொடுத்ததாகத் தெரிகிறது.

அதிர்ச்சியடைந்த நடிகை, உடனடியாக காவல் கட்டுப்பாட்டு - அறைக்குத் தகவல் அளித்தார். சம்பவ இடத்துக்கு விரைந்து வந்த மாம்பலம் போலீஸார். அந்த ஊழியரைப் பிடித்து காவல் நிலையம் அழைத்துச் சென்று விசாரணை நடத்தினர். அதில், அவர் சென்னையில் உள்ள தனியார் கல்லூரியில் படித்துக் கொண்டு, பகுதி நேரமாக இந்த ஹோட்டலில் பணியாற்றி வருவது தெரியவந்தது.

போலீஸார் எச்சரிக்கை: மாணவனின் எதிர்காலத்தைக் கருத்தில் கொண்டு, இனி இது போன்ற செயல்களில் ஈடுபடக்கூடாது என எச்சரித்த போலீஸார். தேவைப்படும் போது விசாரணைக்கு ஆஜராக வேண்டும் என எழுதி வாங்கிக் கொண்டு அந்த ஊழியரை அனுப்பி வைத்தனர். இதையடுத்து, அந்த நடிகை உடனடியாக ஹோட்டலை காலி செய் துவிட்டு வேறு இடத்துக்குச் சென்றுவிட்டார்.

## திருவாரூர் அரசுப் பள்ளியில் பாம்பு தீண்டிய 11-ம் வகுப்பு மாணவன் உயிரிழப்பு



**திருவாரூர், பிப்.10:** அரித்துவாரமங்கலம் அரசு மேல்நிலைப்பள்ளியில் பாம்பு தீண்டி சிகிச்சை பெற்று வந்த 11ஆம் வகுப்பு மாணவன் இன்று (பிப்.8) உயிரிழந்தார்.

திருவாரூர் மாவட்டம் அரித்துவாரமங்கலம், சேத்தனூரைச் சேர்ந்தவரும் விவசாயியுமான முருகானந்தம்-ராதா. இந்த தம்பதியினரின் மகன் சிவப்பிரகாசம்(17). இவர், அரித்துவாரமங்கலம் அரசு மேல்நிலைப்பள்ளியில் 11-ம் வகுப்பு படித்து வருகிறார்.

சிவப்பிரகாசம், கடந்த பிப்.4-ம் தேதி வழக்கம் போல் பள்ளிக்குச் சென்றார். பின்னர் மதியம் இடைவேளையின் போது, உணவு சாப்பிடுவதற்காக தான் கொண்டு வந்த உணவுப்பையில் இருந்த டிபன் பாக்ஸை வெளியே எடுக்கும் போது, அதில் இருந்த கட்டுவிரியன் பாம்பு, சிவப்பிரகாசத்தை தீண்டியதாக போலீஸார் தெரிவித்தனர்.

இதையறிந்த அந்தப் பள்ளி ஆசிரியர்கள், அவரது பெற்றோருக்கு தகவல் அளித்தனர். பின்னர், சிவப்பிரகாசம் தஞ்சாவூர் மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். அங்கு தொடர்ந்து அவருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வந்த நிலையில், சிகிச்சை பலனின்றி இன்று (பிப்.8) உயிரிழந்தார்.

அவரது உறவினர்கள், பள்ளி வளாகத்திற்குள் இருக்கும் அறையில் இருந்த புத்தகத்தை வெளியில் எடுக்கும் போது, அதில் இருந்த கட்டுவிரியன் பாம்பு தீண்டியதாக குற்றம்சாட்டியுள்ளனர். எனவே, இது தொடர்பாக அரித்துவாரமங்கலம் போலீஸார் வழக்கு பதிந்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

## சென்னையில் கடுமையான பனிமூட்டம் நிலவியதால் 40 விமானங்களின் சேவை பாதிப்பு



**சென்னை, பிப்.10:** கடுமையான பனிமூட்டம் நிலவியதால் சென்னை விமான நிலையத்தில் 40 விமானங்களின் சேவை பாதிக்கப்பட்டது. சென்னை விமான நிலைய பகுதியில் நேற்று கடும் பனிமூட்டம் நிலவியதால் விமான ஓடுபாதை தெளிவாக தெரியவில்லை.

இதனால் மும்பை, கோலாலம்பூர், புனே, பெங்களூரு, ஹைதராபாத், துபாயிலிருந்து வந்த 7 விமானங்கள் சென்னையில் தரையிறங்க முடியாமல் நீண்ட நேரம் வானில் வட்டமடித்துக் கொண்டு இருந்தன.

சென்னை விமான நிலைய கட்டுப்பாட்டு அறை அதிகாரிகள், அந்த விமானங்களை பெங்களூரு, கோவை, திருப்பதி ஆகிய விமான நிலையங்களுக்கு திருப்பி அனுப்பினர்.

அதேபோல் பெங்களூர், ஹைதராபாத், மும்பை, கோவை, திருவனந்தபுரம், இலங்கை உள்ளிட்ட 12 விமானங்கள் சென்னை யில் தரையிறங்க முடியாமல் நீண்ட நேரம் வானில் வட்டமடித்த பின்னர் தாமதமாக தரையிறங்கின.

சென்னையிலிருந்து பெங்களூர், ஹைதராபாத், மும்பை, அந்தமான், திருச்சி, டெல்லி, துர்காபூர், புனே, கொல்கத்தா, கோவை, துபாய், இலங்கை உள்ளிட்ட இடங்களுக்கு புறப்படும் 21 விமானங்கள் கடுமையான பனிமூட்டம் காரணமாக தாமதமாக புறப்பட்டுச் சென்றன. சென்னை விமான நிலையத்தில் மூடுபனி காரணமாக மொத்தமாக 40 விமானங்களின் சேவை பாதிக்கப்பட்டது. இதனால், பயணிகள் அவதிக்குள்ளாகினர்.

காலை 9 மணிக்கு மேல் பனிமூட்டம் குறைந்ததால், விமான சேவை இயல்பு நிலைக்கு திரும்பியது.

பெங்களூரு, கோவை, திருப்பதி உள்ளிட்ட விமான நிலையங்களுக்கு திருப்பி விடப்பட்ட விமானங்கள் ஒன்றன் பின் ஒன்றாக சென்னையில் தரையிறங்கின.

## சென்னை துறைமுகத்தில் கடலுக்குள் கன்டெய்னர் லாரி டிரெய்லர் கேபின் விழுந்த விபத்தில் ஓட்டுநர் சடலமாக மீட்பு



**சென்னை, பிப்.10:** தூத்துக்குடி மாவட்டம் கயத்தார் அருகே உள்ள வானரமுட்டி கிராமத்தைச் சேர்ந்தவர் கன்டெய்னர் லாரி ஓட்டுநர் முத்துமாரியப்பன் (36). இவர் தூத்துக்குடி துறைமுகத்தில் கன்டெய்னரை இறக்கிவிட்டு அடுத்த கன்டெய்னரை ஏற்றுவதற்காக சென்னை துறைமுகத்துக்கு நேற்று முன்தினம் அதிகாலை 3 மணியளவில் வந்தார்.

அந்தமானுக்கு சரக்கு ஏற்றும் இடத்தில் டிரெய்லர் லாரியை ஓட்டிச் சென்றபோது திடீரென முன்பக்கம் கேபின் (டிரைவர் கேபின்) உடைந்து அதனுடன் முத்துமாரியப்பன் கடலில் தலைக்குப்புற விழுந்தார். இதைக் கண்டு துறைமுக ஊழியர்கள் அதிர்ச்சி அடைந்தனர்.

உடனடியாக தீயணைப்புத் துறைக்கு தகவல் தெரிவித்தனர்.

உடனே துறைமுகம் காவல் நிலைய போலீஸார் மற்றும் தீயணைப்புப் படை வீரர்கள் சம்பவ இடம் விரைந்தனர். மேலும் இந்திய கடற்படையும் விரைவாக ஒரு டைவிங் குழுவை அனுப்பி வைத்தது.

அவர்கள் இணைந்து செயல்பட்டு கடலுக்குள் பாய்ந்த டிரெய்லர் கேபினை மீட்கப்பட்டனர். தீவிர தேடுதலுக்குப் பிறகு முத்துமாரியப்பன் சடலமாக கண்டெடுக்கப்பட்டார்.

பின்னர் அவரது உடல் பிரேதப் பரிசோதனைக்காக ஸ்டான்லி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

இந்த விபத்து தொடர்பாக துறைமுகம் காவல் நிலைய போலீஸார் வழக்குப் பதிந்து விசாரித்து வருகின்றனர்.

## சுதா சேஷய்யன் உள்ளிட்ட 5 பேருக்கு 'ராஜஸ்தானி தமிழ் சேவா' விருதுகள்: நீதிபதி மகாதேவன் வழங்கினார்




**சென்னை, பிப்.10:** தமிழகத்தின் சமூக, கலாச்சாரம் மற்றும் கட்டமைப்பு வளர்ச்சிக்கு தங்களது தன்னலமற்ற சேவையால் சிறந்த பங்களிப்பை வழங்கிய தனிநபர்கள், நிறுவனங்களை கவுரவித்து 'ராஜஸ்தானி - தமிழ் சேவா' விருதுகளை ராஜஸ்தானி அசோசியேஷன் தமிழ்நாடு வழங்கி வருகிறது.

இந்த ஆண்டுக்கான விருதுக்கு தமிழ்நாடு டாக்டர் எம்ஜிஆர் மருத்துவப் பல்கலைக்கழக முன்னாள் துணை வேந்தர் சுதாசேஷய்யன், மேற்கு மாம்பலம் பொது சுகாதார மையத் தலைவர் சுவாமி நாதன் ஐசன்ஹோவர், மயிலாப்பூர் கபாலீஸ்வரர் கோயில் தலைமை ஓதுவார் பி.சற்குருநாதன், பயிர் அறக்கட்டளை தலைவர் வி.ஆராயி, வழக்கறிஞர் கே.ஆர்.ராஜா ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர். விருதாளர்களை 'துக்ளக்' ஆசிரியர் எஸ்.குருமூர்த்தி, 'இந்து' என்.ரவி, பரதநாட்டியக் கலைஞர் பத்மா சுப்பிரமணியம், அண்ணா பல்கலை. முன்னாள் துணைவேந்தர் பாலகுருசாமி, பகவான் மகாவீர் அறக்கட்டளை நிறுவனர் சுகல் சந்த் ஜெயின் ஆகியோர் அடங்கிய நடுவர் குழு தேர்வு செய்திருந்தது.

இந்நிலையில், விருது வழங்கும் விழா சென்னையில் நேற்று நடைபெற்றது. உச்ச நீதி மன்றநீதிபதி ஆர்.மகாதேவன் தலைமை வகித்து, விருதாளர்களுக்கு 'ராஜஸ்தானி - தமிழ் சேவா' விருதுகள், ரூ.2 லட்சத்துக்கான காசோலைகளை வழங்கி கவுரவித்தார்.

நிகழ்ச்சியில் அவர் பேசியதாவது: எப்படி வேண்டுமானாலும் பயணிக்கக்கூடியது வாழ்க்கை. இதில் நமக்கு தேவையான அனைத்து விதமான வசதிகளையும் தேடிக் கொள்ளலாம். பதவி, பணம், கவுரவத்தால் நம்மை உயர்த்திக் கொள்ளலாம். ஆனால், அனைத்தும் ஒருநேரம் நம்மைவிட்டு விலகிச் செல்லும்.

அவை அனைத்தும் விலகிய பின்னால், நம் நிலைமை இதுதான் என்பதை இன்றே உணர்ந்து பாருங்கள் என்று, தங்களது செயல்கள், வார்த்தைகள், பேச்சுகள், வாழ்க்கை முறை மூலம் நமக்கு எடுத்துக்கூறி, இந்த மண், மொழி, நாட்டை தங்களது பணிகளால் சிறப்பித்துள்ளனர் இந்த விருதாளர்கள். இவர்களை கவுரவிப்பதன் மூலமாக, இப்படிப்பட்ட பணிகள் சிறக்க வேண்டும் எனும் செய்தியை ராஜஸ்தானி அசோசியேஷன் பதிவு செய்துள்ளது என்று அவர் பேசினார்.

'இந்து' என்.ரவி பேசும் போது, "ராஜஸ்தானி மக்கள் கல்வி, மருத்துவ சேவை மூலம் தமிழக வளர்ச்சிக்கும் தொண்டாற்றி வருகின்றனர். அந்த வகையில் தமிழ் சேவா விருதுகள் என்பது, தமிழகத்தின் சமூக கட்டமைப்பில் ராஜஸ்தான் சமூகத்தின் ஒருங்கிணைப்பை வெளிப்படுத்தும் ஒரு முக்கிய மைல்கல் ஆகும்" என்றார். விழாவில் ராஜஸ்தானி அசோசியேஷன் தமிழ் நாடு தலைவர் நரேந்திர ஸ்ரீஸ்ரீமால், பொதுச் செயலாளர் தினேஷ் போத்தாரி, தமிழ் சேவா விருதுகள் குழுத் தலைவர் அஜித் சோர்டியா, அமைப்பாளர் சிஏ அனில் கிச்சா உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

## சிதம்பரம் நடராஜர் கோவிலுக்கு 50 பவுன் தங்க காசு மாலை

### சென்னை பக்தர் காணிக்கையாக வழங்கினார்



**கடலூர், பிப்.10:** கடலூர் மாவட்டம் சிதம்பரத்தில் பிரசித்தி பெற்ற நடராஜர் கோவில் உள்ளது. இக்கோவில் சித்சபையில் வீற்றுள்ள சிவகாமி அம்மனுக்கு அணிவிக்க சென்னையை சேர்ந்த பக்தர் சுப்ரமணியன் சுமார் 45 லட்சம் ரூபாய் மதிப்பிலான 50 பவுன் தங்க காசு மாலையை வழங்கினார்.

கோவிலில் உள்ள அவரது கட்டளை தீட்சிதரான ராமலிங்க தீட்சிதர் மூலம் காணிக்கையாக நடராஜர் கோவில் பொது தீட்சிதர்களின் செயலர் சிவசுந்தர தீட்சிதரிடம் வழங்கினார்.

இந்த காசு மாலை நேற்று காலை பூஜையின் போது சிவகாமி அம்மனுக்கு பொது தீட்சிதர்களால் அணிவிக்கப்பட்டது.

## சென்னையில் இன்று (10.02.2026) மின்தடை ஏற்படும் இடங்கள்...

**சென்னை, பிப்.10:** சென்னையில் பராமரிப்பு பணிகள் காரணமாக ஒரு சில பகுதிகளில் மின் தடை செய்யப்படுகிறது. காலை 9 மணி முதல் பிற்பகல் 2 வரை மின் தடை செய்யப்படும். பராமரிப்பு பணி முடிவடைந்தவுடன் மின் விநியோகம் கொடுக்கப்படும்.

அந்த வகையில், நாளை மின் தடை ஏற்படும் பகுதிகள் குறித்து தமிழ்நாடு மின்சார வாரியம் அறிவிப்பு வெளியிட்டுள்ளது. அதன்படி, சென்னையில் நாளை (10.02.2026) காலை 9 மணி முதல் பிற்பகல் 2 மணி வரை மின் வாரிய பராமரிப்பு பணி காரணமாக பின்வரும் இடங்களில் மின் விநியோகம் நிறுத்தப்படும். அதன்படி,

அடையாறு: சாஸ்திரி நகர், பெசன்ட் நகர் 1 முதல் 7 வது அவென்யூ, 1 முதல் 31 வது குறுக்குத் தெரு, கஸ்டம்ஸ் காலனி, பீச் ஹோம் அவென்யூ, CPWD குவார்ட்டர்ஸ், ஆர்பிஐ குவார்ட்டர்ஸ், தாமோதரபுரம், ஊரூர்குப்பம், திருவள்ளுவர் நகர், ஓடைமா நகர், கலாஷேத்ரா TM தெரு, எல்லையம்மன் கோவில் தெரு, அண்ணா காலனி, கக்கன் காலனி, லட்சுமிபுரம், எம்ஜி சாலை, சிவகாமிபுரம், மாளவியா அவென்யூ, ராதாகிருஷ்ணன் நகர், மருதீஸ்வரர் நகர், ஸ்ரீராம் நகர், அண்ணா தெரு, முத்துலட்சுமி தெரு, வால்மீகி நகர், ஆர்பிஐ காலனி, கிழக்கு மாட தெரு, கலாசேத்ரா சாலை, வால்மீகி தெரு, வேம்புலியம்மன் டீச்சர் தெரு, சி. காலனி, ஜெயராம் தெரு, எல்பி சாலை, சுப்பிரமணியன் காலனி, எஸ்பிஐ காலனி, கற்பகம் கார்டன், பத்மநாபா நகர் 4 மற்றும் 5 வது தெரு, பரமேஸ்வரி நகர், ஜீவரத்தினம் நகர், சாந்தி காலனி, வெங்கடேஸ்வரா நகர், அருணாச்சலபுரம், ராமசாமி கார்டன், பெசன்ட் அவென்யூ, அடையாறு பாலம் சாலை, ஆர்.எஸ்.காம்பவுண்ட்.

பூந்தமல்லி: சேனீர்குப்பம், கரையாஞ்சாவடி, துளசிதாஸ் நகர், சின்ன மாங்காடு, குமணஞ்சாவடி.

ஐயப்பன்தாங்கல்: அன்னை இந்திரா நகர், புஷ்பா நகர், விஜயலட்சுமி நகர், பாவேந்தர் நகர், ராம்தாஸ் நகர், லட்சுமி நகர், இந்திரா நகர்.

கல்மண்டபம்: கேஎல்எம் சாலை, உசைன் மேஸ்திரி தெரு, ஃபக்கீர் தெரு, ஷேக் மேஸ்திரி தெரு, தம்பு லேன், மார்க்கெட் லேன், ஜிஎம் பேட்டை, லோட்டஸ் ராமசாமி தெரு, ஏஜே காலனி 1 முதல் 5வது தெருக்கள், கிரேஸ் கார்டன், மேற்கு கேஎல்எம் சாலை, ஜீவரத்தினம் குவார்ட்டர்ஸ், கிழக்கு திருவால் தெரு, இந்திரா நகர், குவார்ட்டர்ஸ் நகர், பஜார் தெரு, NRT சாலை, சல்மா அபார்ட்மெண்ட்.

ராயபுரம்: எம்சி ரோடு, கல்லறை சாலை, பிவி கோவில், ராமன் சாலை, வெங்கடாசலம் தெரு, மசூதி தெரு, மணிகண்ட முதலி தெரு, ஆண்டி அப்பா முதலி தெரு, ஆதம் தெரு, மரியதாஸ் தெரு, கிழக்கு, மேற்கு மற்றும் தெற்கு மாதா சர்ச் தெரு, சிங்காரா கார்டன், மீனாட்சி அம்மன் பேட்டை, தோபி கானா தெரு, கல்முந்த நாடார் தெரு, வி. 4வது தெரு, அம்மன் கோவில் தெரு 1 முதல் 8வது தெரு, ராஜகோபால் தெரு, பஜனை கோவில் தெரு, செல்வ விநாயகர் கோவில் தெரு, சோலையப்பன், நல்லப்ப வாத்தியார் தெரு, வள்ளுவன் தெரு மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகள்.

## எழும்பூர் ரயில் நிலையத்தில் சீரமைப்பு பணி: புறநகர் மின்சார ரயில் இயக்கத்தில் மாற்றம்



**சென்னை:** சென்னை எழும்பூர் ரயில் நிலையத்தில் சீரமைப்பு பணி நடந்து வருகிறது. இதன் காரணமாக, பிப்.8-ம் தேதி (நேற்று) முதல் 18-ம் தேதி வரை அங்கு புறநகர் மின்சார ரயில்கள் இயக்கத்தில் சில மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன.

நடைமேடை மாற்றம்: புறநகர் மின்சார ரயில்கள் மேற்கண்ட நாட்களில் இரவு 9 மணி முதல் அதிகாலை 5 மணி வரை 10, 11-வது நடைமேடைகளுக்கு பதிலாக 5, 6-வது நடைமேடைகளில் வந்து செல்லும். செங்கல்பட்டு, தாம்பரத்தில் இருந்து கடற்கரைக்கு செல்லும் ரயில்கள் 5-வது நடைமேடை வழியாகவும், மறுமார்க்கத்தில், கடற்கரையில் இருந்து தாம்பரம், செங்கல்பட்டு வரை செல்லும் ரயில்கள் 6-வது நடைமேடை வழியாகவும் இயக்கப்படும்.

வார நாட்களில் (பிப்.9 முதல் 18 வரை) கடற்கரையில் இருந்து தாம்பரத்துக்கு இரவு 8.55, 10.20, 11.30 மணிக்கு புறப்படும் புறநகர் ரயில்கள் முழுமையாக ரத்து செய்யப்படுகின்றன.

அதேபோல, கூடுவாஞ்சேரியில் இருந்து கடற்கரைக்கு இரவு 9.05. 10.10, 11.15 மணிக்கு புறப்படும் ரயில்கள், தாம்பரம் வரை மட்டுமே செல்லும். தாம்பரம் - கடற்கரை இடையே பகுதி ரத்து செய்யப்படுகின்றன.

ஞாயிற்றுக்கிழமைகளில் (பிப்.8, 15) கடற்கரையில் இருந்து தாம்பரத்துக்கு இரவு 9.30, 10.00, 11.40 மணிக்கு புறப்படும் ரயில்களும், தாம்பரத்தில் இருந்து கடற்கரைக்கு இரவு 10.00, 11.00, 11.40 மணிக்கு புறப்படும் ரயில்களும் ரத்து செய்யப்படுகின்றன. சென்னை ரயில்வே கோட்ட செய்திக் குறிப்பில் இத்தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சாலையில் கிடந்த 20 பவுன் நகை, வெள்ளிப் பொருள்களை காவல் நிலையத்தில் ஒப்படைத்த தூய்மைப் பணியாளர்!



**திருவாரூர், பிப்.10:** திருவாரூரில் சாலையில் கிடந்த 20 பவுன் நகைகள், 750 கிராம் வெள்ளிப் பொருள்களை மீட்டு காவல் நிலையத்தில் ஒப்படைத்த தூய்மைப் பணியாளருக்கு போலீஸாா பாராட்டு தெரிவித்தனா்.

சென்னை கூடுவாஞ்சேரியைச் சோ்ந்தவா் முத்துலட்சுமி. இவா், திருத்துறைப்பூண்டி அருகே உள்ள ஆலிவலம் பகுதியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பங்கேற்க திருவாரூா் வந்துள்ளாா். திருவாரூா் நகரில் உள்ள உறவினா் வீட்டுக்கு ஆட்டோவில் சென்றுவிட்டு, பின்னா் நிகழ்ச்சி நடைபெறும் வீட்டுக்குச் சென்றுள்ளாா். அப்போது, அவா் கையில் வைத்திருந்த 20 பவுன் தங்க நகைகள், 750 கிராம் வெள்ளிப் பொருள்கள் அடங்கிய பை தவறி சாலையில் விழுந்துவிட்டது. ஆலிவலம் சென்ற பிறகுதான் பையை தவறவிட்டது முத்துலட்சுமிக்கு தெரியவந்தது.

இதனிடையே, கராட்சி தூய்மைப் பணியாளா் துரை, சாலையில் கிடந்த அந்த பையை எடுத்து பாா்த்தபோது, தங்க நகைகள், வெள்ளிப் பொருள்கள் இருந்தது தெரியவந்தது. இதையடுத்து, அவற்றை திருவாரூா் நகரக் காவல் நிலையத்தில் துரை ஒப்படைத்தாா். அதனை போலீஸாா் ஆய்வு மேற்கொண்டபோது, அவை 20 பவுன் தங்க நகைகள், 750 கிராம் வெள்ளிப் பொருள்கள் என்பது தெரியவந்தது.

இந்த நிலையில், தனது நகைப் பையை தவறவிட்டது குறித்து, திருவாரூா் நகரக் காவல் நிலையத்தில் முத்துலட்சுமி புகாா் அளிக்க வந்தாா். அவரிடம் பையில் இருந்த பொருள்கள் குறித்து கேட்டறிந்த போலீஸாா், நகைக்கான ஆவணங்களை சரிபாா்த்து நகைகள் அவா்களுடையது என்பதை உறுதி செய்து, அவரிடம் ஒப்படைத்தனா்.

மேலும், சாலையில் கிடந்த நகைப் பையை காவல்நிலையத்தில் ஒப்படைந்த தூய்மைப் பணியாளா் துரைக்கு, காவல் ஆய்வாளா் சந்தானமேரி தலைமையில் போலீஸாா் பாராட்டுத் தெரிவித்து, மாலை அணிவித்து கௌரவப்படுத்தினா்.

# ஆய்வுகள் மக்களைச் சென்றடைய வேண்டும்: ஆளுநர் ரவி




**சென்னை, பிப்.10:** விஞ்ஞானிகளின் ஆய்வுகள் காப்பகங்களிலோ, ஆவணங்களாகவோ இருந்தால் பலனில்லை; அவை மக்களிடம் சென்றடைய வேண்டும் என ஆளுநா் ஆா்.என். ரவி ஞாயிற்றுக்கிழமை வலியுறுத்தினாா்.

கோவையில் கடந்த நவம்பா் மாதம் பிரதமா் மோடி முன்னிலையில் நடைபெற்ற தென்னிந்திய இயற்கை வேளாண்மை உச்சிமாநாட்டை வெற்றிகரமாக நடத்தியதற்காகவும், அண்மையில் பத்மஸ்ரீ விருது பெற்றகாகவும் தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தா் டாக்டா் கே.ராமசாமிக்கும், அவருக்கு உறுதுணையாக இருந்தவா்களுக்கும் ஆளுநா் மாளிகையில் பாராட்டு விழா நடைபெற்றது.

இதில் தலைமை விருந்தினராகப் பங்கேற்று ஆளுநா் ஆா்.என்.ரவி பேசியது: தமிழகத்தில் 18-ஆம் நூற்றாண்டில் உணவுப் பொருள் உற்பத்தித் திறன் மிதமிஞ்சிய அளவில் இருந்துள்ளதை ஓலைச்சுவடி ஆய்வுகள் காட்டுகின்றன. அந்த உற்பத்தியில் பாதியளவுகூட இப்போது இல்லை.

இடையில் ஏற்பட்ட வறுமைகளுக்குப் பின்னா் நமது வேளாண் விஞ்ஞானிகளால் பற்றாக்குறையிலிருந்து மீண்டு வந்துள்ளோம். ஆனால், இப்போது அதிகப்படியான ரசாயன உரங்களால் நமது நிலத்துக்கும் உடல் நலத்துக்கும் மிகப்பெரிய சவால் ஏற்பட்டிருக்கிறது. இதில் உள்ள ஆபத்தை நம்மாழ்வாா் போன்றவா்கள் உணா்ந்தனா்.

கோவையில் இயற்கை வேளாண் மாநாட்டை நடத்த பிரதமருக்கு பரிந்துரைத்தபோது அவா் மிகவும் மகிழ்ச்சியுடன் வந்து பங்கேற்றாா். அதனால், இயற்கை வேளாண்மை ஊக்கம் பெற்றுள்ளது.

விஞ்ஞானிகளின் கண்டுபிடிப்புகள் மக்களைச் சென்றடைய வேண்டும். தொழில்நுட்பங்கள், புதிய கண்டுபிடிப்புகளை சமூகத்தின் தேவைகளைப் பூா்த்தி செய்யும் வகையில் மாற்றம் செய்ய வேண்டியது அவசியம். அதைச் செய்தவா் டாக்டா் கே.ராமசாமி என்றாா் அவா்.

முன்னாள் தலைமைச் செயலா் சண்முகம், தென்னிந்திய இயற்கை வேளாண்மை உச்சி மாநாடு குழு-2025 உறுப்பினா்கள், தமிழ்நாடு வேளாண் பயிற்சி நிறுவனங்களின் கூட்டமைப்பின் தலைவா் ஏ.பி. கருப்பையா, தமிழ்நாடு அனைத்து விவசாயிகள் அமைப்புகளின் ஒருங்கிணைப்புக் குழுத் தலைவா் பி.ஆா். பாண்டியன், களஞ்சியம் விவசாயிகள் சங்கத்தின் தலைவா் அத்திக்கடவு சுப்பிரமணியம், தமிழ்நாடு வாழை உற்பத்தியாளா் நிறுவன இயக்குநா் ஜி. அஜீதன், பசுமை சிகரம் அறக்கட்டளையின் தலைவா் யோகநாதன் உள்ளிட்ட 18 பேரை ஆளுநா் கௌரவித்தாா்.

# இந்திய ஜனநாயக கட்சி 4-வது மாநில மாநாடு



**கடலூர், பிப்.10:** கடலூர் மாவட்டம் வேப்பூர் அடுத்த பாசார் இந்திய ஜனநாயக கட்சி 4-வது மாநில மாநாடு தலைவர் டாக்டர் ரவி பச்சமுத்து 90 அடி கம்பத்தில் மாநாட்டு கொடி ஏற்றி வைத்து முன்னிலை உரையாற்றினார். தாரை தப்பட்டை, மேளதாளங்களுடன், கரகாட்டம், சிலம்பாட்டம் கலை நிகழ்வுகள் துவங்கியது.

தமிழ்த்தாய் வாழ்த்துக்குப்பின் மாநில இலக்கிய அணி செயலாளர் சிதம்பரநாதன் வரவேற்றார். தீர்மானங்களை கட்சியின் முக்கிய நிர்வாகிகள் வாசித்தனர். நிறுவனர் டாக்டர் பாரிவேந்தன் உறுதிமொழியை முன்மொழிந்தார். விழாப்பேருரை ஆற்றினார். மாநில பொருளாளர் ராஜன், பார்கவக்குல முன்னேற்ற சங்கத் தலைவர் கோவைதம்பி, சங்க சட்ட ஆலோசகர் வக்கீல் வெங்கடேசன், கட்சி பொதுச்செயலாளர் முனைவர் சண்முகம் உள்ளிட்ட நிர்வாகிகள் வாழ்த்துரை வழங்கினர். பாஜ மாநிலத் தலைவர் நையினார் நாகேந்திரன் சிறப்புரை ஆற்றினார். விருத்தாசலம் மாவட்டத் தலைவர் பாரதிராஜா நன்றி கூறினார்.

தீர்மானங்கள் மக்கள் விரோத திமுக அரசு பொய்யான வாக்குறுதிகளை கொடுத்து ஊழல் திமுக ஆட்சியை கண்டிக்கிறோம். பாரதப் பிரதமர் மோடியின் வழிகாட்டுதலின்படி எடப்பாடி பழனிச்சாமி தலைமையில் தேசிய ஜனநாய கூட்டணி ஆட்சி அமைய வேண்டும். இந்தியாவில் பிறந்த அனைவரும் சமம். எனவே சிறுபான்மையினர் என்ற சொல்லை நீக்க வேண்டும். கல்வி வேலைவாய்ப்பில் முன்னுரிமை அளிக்க இடதுக்கீடு சாதி மதம் தவிர்த்து பொருளாதார நிலை அடிப்படையில் அளிக்க வேண்டும்.மக்களின் நீண்ட நாள் கோரிக்கையான விருத்தாசலம் தனி மாவட்டம் அமைக்க வேண்டும். நேரம், பணம், மனித ஆற்றலை வீணாவதை தடுக்க ஒரே நாடு ஒரே தேர்தல் நடத்த வேண்டும். 1974-ம் ஆண்டில் திமுக ஆட்சியில் தாரை வார்க்கப்பட்ட கச்சத்தீவு மீட்கப்பட்டு தமிழக மீனவர்களிடம் ஒப்படைக்க வேண்டும். வன்கொடுமை சட்டத்தை திருத்தம் செய்ய அறிவிக்க வேண்டும். மத்திய அரசு கல்வித்துறையின் கீழ் செயல்படும் பிஎம்ஸ்ரீ பள்ளிகள் மாவட்டம் தோறும் துவக்க வேண்டும். போராடிவரும் போக்குவரத்து, இடைநிலை ஆசிரியர்கள், செவிலியர்கள், தூய்மைப் பணியாளர்கள் கோரிக்கைகள் நிறைவேற்ற வேண்டும். மூடப்பட்ட நெல்கொள்முதல்நிலையங்களை திறந்து, நவீன கருவிகளுடன் தவறு நடைபெறாதவாறு சரி செய்ய வேண்டும் இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

பாரிவேந்தர் பேசியதாவது: எந்த கட்சியும் ஒரு தொகுதியை மாவட்டத் தலைவர்களை நியமித்து இருக்கிறது, இந்திய ஜனநாய கட்சிதான். நான் 3 பாடல்களை நல்லிரவில் எழுதி நீங்கள் என்ன செய்ய வேண்டும் என்று அதில் சொல்லி இருக்கிறேன். அதில் ஒரு தலைவன் கடலூரில் காத்திருப்பேன் என்றேன், வந்தீர்கள் வாழ்த்துகள். கட்சி துவங்கி 15 ஆண்டுகள் ஆகிறது. 8 மாதத்தில் 2011 தேர்தலில் 136 தொகுதியில் போட்டி இட்டனர். 2026 நமக்கு 4-வது தேர்தல். பெரம்பலூர் பாராளுமன்ற தொகுதியில் ஆயிரத்து 500 மாணவர்களை என்சொந்த செலவில் படிக்க வைத்தேன். 3-வது மாநாடு விவசாயிகள் வாழ்வுரிமை மாநாட்டினை இளவரசன் எம்எல்ஏ மூலம் முதல்வர் ஜெயலலிதா அழைத்தார். மையம், தமிழ்நாடு இரண்டும் என் கட்சியின் இரு கண்கள். அதை விட்டு வர முடியாது என்று சொல்லிவிட்டேன்.

செஷல்ஸ் நாட்டில் உள்ள அதிபர் பிம்ஸ் மருத்துவமனுடன் மருத்துவ ஒப்பந்தம் போட்டுள்ளோம். 10 ஆண்டுகளில் 650 கோடி கல்வி மருத்துவத்திற்கு செலவு செய்து இருக்கிறோம். 36 லட்சம் மாணவர்களுக்கும், 6 லட்சம் பேருக்கு மருத்துவ உதவி செய்து இருக்கிறோம்.

ஆபரேஷன் சிந்தூர் மே மாதத்தில் பாதிக்கப்பட்ட 27 ஆயிரம் மக்களுக்கு உதவ ரூபாய் ஒரு கோடி வழங்கி இருக்கிறோம். தமிழக பாராளுமன்ற உறுப்பினர்கள் இந்தியா வளர்ச்சியை தடுத்து வருகிறார். எதிர்ப்பதால் இழப்பு தமிழக மக்களுக்குத்தான்.

தமிழ்நாடு வாழ்க என்றனர். நான் இந்தியா வாழ.க, தமிழ்நாடும் வாழ்க என்று பாராளுமன்றத்தில் முழங்கினேன். தமிழம் சட்ட ஒழுங்கு கெட்டு ஊழல் நிறைந்து, இலவசங்களை கொடுத்து ஏமாற்றி வருகின்றனர். மாநாட்டை சிறப்பாக நடைபெற ஒத்துழைத்த அனைவருக்கும் வாழ்த்துகள், பாராட்டுகள். அனைவரும் பத்திரமாக வீடு சென்று சேருங்கள். அந்த 3 பாடல்களை திரும்பத்திரும்ப கேளுங்கள் என்றார். கூட்டத்தில் அனைத்து நிலை பொறுப்பாளர்கள் பொதுமக்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.




பனைக்குளம் தமுமுக சார்பில் சென்னையில் நடைபெறும் சமூக நீதி மாணவர் இயக்கத்தின் வெள்ளி விழா மாநாட்டில் கலந்து கொள்ள பனைக்குளம் தமுமுக மாவட்ட பொருளாளர் அஹமது அசன் தலைமையில் புறப்பட்டனார்.



தஞ்சை மாவட்ட சோழிய வெள்ளாளர், அனைத்து வெள்ளாளர்கள் சமூக நல சங்கம். வ. உ. சி. திருமண அமைப்பகம் மற்றும், தஞ்சை,திருச்சி,திண்டுக்கல்,கோவை,மன்னார்குடி, திருவரம்பூர்,மதுரை வாடிபட்டி உள்ளிட்ட 10 மாவட்ட வெள்ளாளர் சங்கங்கள் உள்ளடக்கிய தமிழ்நாடு வேளாளர் திருமண தகவல் மையம் கூட்டமைப்பு சார்பில் மார்ச் 1 அன்று தஞ்சையில் நடைபெற இருக்கும் மங்கள சந்திப்பு விழா நிகழ்ச்சி ஆலோசனை கூட்டம். மற்றும் கூட்டமைப்பு வளர்ச்சி குறித்த ஆலோசனை கூட்டம். கூட்டமைப்பு தலைவர். S. பாஸ்கரன் தலைமையில். பொது செயலாளர்.M.ராதா கிருஷ்ணன். கூட்டமைப்பு ஒருங்கிணைப்பாளர்.G..பாலுபிள்ளை,R.T.முருகேசன்பிள்ளை ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது .

தஞ்சை மாவட்ட தலைவரும், ஒருங்கினைப்பாளருமான கோவி. மோகன். மங்கள சந்திப்பு நோக்கம் குறித்து விளக்கமளித்தார். இந்த நிகழ்ச்சியில் திண்டுக்கல். A. R. சந்திரன்பிள்ளை, கோவை,ரத்தனம்பிள்ளை.மன்னை, S. சிவராமன். வாடிபட்டி,S. செந்தில்குமார். மகளிர் பிரிவு நிர்வாகிகள். கிருஷ்ணவேணி.புவனேஸ்வரி, கவிதா,கனகமணி, விஜயலட்சுமி சர்மிளா, உள்ளிட்டோர் கலந்து கொன்டனர்.




# ஆந்திரா முன்னாள் முதல்வரை சந்தித்த எடப்பாடி பழனிசாமி



**சென்னை, பிப்.10:** உறவினரின் மகன் திருமண விழாவில் கலந்துகொள்வதற்காக ஆந்திர பிரதேச மாநிலத்தின் முன்னாள் முதலமைச்சரும், ஒய்.எஸ்.ஆர்.சி.பி கட்சி தலைவருமான ஒய்.எஸ். ஜெகன் மோகன் ரெட்டி சென்னை வந்துள்ளார்.

ஒய்.எஸ். சுனில் ரெட்டியின் (ஒய்.எஸ். ஜெகனின் தந்தைவழி மாமா ஒய்.எஸ். ஜார்ஜ் ரெட்டியின் மகன்) மகன் சாஹிலின் திருமணத்தில் பங்கேற்பதற்காக அவர் சென்னையில் இருக்கிறார். சாஹில் மற்றும் வேதிகாவின் திருமணம் இன்று காலை நடைபெற்றது. இந்த திருமண நிகழ்வில் உறவினர்கள், திரைப்பிரபலங்கள் மற்றும் அரசியல் பிரமுகர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

இந்த திருமண நிகழ்ச்சியில் பங்கேற்ற முதல்வர் மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோ ஆந்திரா முன்னாள் முதல்வர் ஒய்.எஸ். ஜெகன் மோகன் ரெட்டியை சந்தித்து பேசினர்.

இந்நிலையில், இந்த திருமண நிகழ்ச்சியில் பங்கேற்ற எதிர்க்கட்சி தலைவர் எடப்பாடி பழனிச்சாமி, ஒய்.எஸ். ஜெகன் மோகன் ரெட்டியை சந்தித்து பேசினார். இந்த சந்திப்பு தொடர்பான புகைப்படங்களை YSR காங்கிரஸ் கட்சி வெளியிட்டுள்ளது.

# விஜய்யை கண்டு தில்லி பயப்படுகிறது! செங்கோட்டையன்



**சென்னை, பிப்.10:** தமிழக வெற்றிக் கழகத்தின் தலைவர் விஜய்யைக் கண்டு தில்லி பயப்படுகிறது என்று எதிர்க்கட்சிகளுக்கு அக்கட்சியின் ஒருங்கிணைப்பாளர் செங்கோட்டையன் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

ஈரோடு மாவட்டம் கோபி செட்டிபாளையத்தில் ஞாயிற்றுக்கிழமை மாலை நடைபெற்ற தவெகவின் ஆலோசனைக் கூட்டத்தில் கலந்துகொண்டு செங்கோட்டையன் நிர்வாகிகள் மத்தியில் உரையாற்றினார்.

அப்போது அவர் பேசியதாவது:

“நான் ஏன் தவெகவுக்குச் சென்றேன் எனப் பலர் கேட்கிறார்கள். மனம் நொந்து போய் பல்வேறு இடர்பாடுகளுக்கு இடையே என்னை தூக்கி வீசியதற்கு பிறகு, ஒரே நொடியில் என்னை தூக்கிவிட்டவர் விஜய். அவர் தளபதி அல்ல, நாளை தமிழகத்தை ஆளப் போகிற தலைவர்.

என் உடலில் ஓடும் ஒவ்வொரு துளி ரத்தமும் விஜய்யை கோட்டைக்கு அனுப்பும் வரை ஓயப் போவதில்லை. ஏழையின் கண்ணீரைத் தொடைப்பதற்காக ஆண்டுக்கு ரூ. 500 கோடி வருமானம் தேவையில்லை என்று மக்களுக்கு பணியாற்ற ஒரு தலைவர் தோன்றியுள்ளார்.

உலக நாடுகளில் உள்ள 3 லட்சம் தமிழர்கள் தலா ரூ. ஒரு லட்சம் செலவு செய்து விஜய்க்கு வாக்களிக்க தமிழகம் வரவுள்ளனர்.

விஜய் பேசினால் எதிர்க்கட்சிகளின் கதை முடிந்துவிடும். எதை, எப்போது, எங்கே பேச வேண்டுமோ அப்போது பேசுவார். பேசும் நாள் தமிழகம் மட்டுமல்ல, இந்தியாவே திரும்பிப் பார்க்கும் நாளாக அமையும். அவர் தமிழகத்தில் முதல்வரானால், உயிரோடு இருக்கும்வரை அவர்தான் முதல்வர்.

ஜனநாயகன் நிறுத்தப்பட்டாலும் பரவாயில்லை, ஜனநாயகத்தை காப்பாற்ற ஒரு தலைவர் வந்துள்ளார். தில்லி நம்மைக் கண்டு பயப்படுகிறது. ஏனெனில், விஜய்க்கு மட்டும் 42 சதவீதம் வாக்கு உள்ளது” எனத் தெரிவித்தார்.

# பொதுத்துறை நிறுவனங்களை சீரழித்ததே திமுகவின் சாதனை!- அன்புமணி

**சென்னை, பிப்.10:** பா.ம.க. தலைவர் அன்புமணி ராமதாஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

இந்தியாவில், 2022-23ஆம் ஆண்டில் மாநில அரசின் பொதுத்துறை நிறுவனங்களால் அதிக இழப்பை சந்தித்த மூன்று மாநிலங்களில் தமிழ்நாடும் ஒன்று என்றும், உத்தரப்பிரதேசம், இராஜஸ்தான் ஆகிய மாநிலங்களுக்கு அடுத்தபடியாக தமிழ்நாட்டில் உள்ள பொதுத்துறை நிறுவனங்கள் எதிர்கொண்ட இழப்பு மட்டும் ரூ.16,048 கோடி என்றும் பதினாறாம் நிதி ஆணையத்தின் முதன்மை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. திமுக ஆட்சியில் பொதுத்துறை நிறுவனங்கள் எந்த அளவுக்கு சீரழிக்கப்பட்டுள்ளன என்பதற்கு இது தான் சான்று ஆகும்.

தமிழ்நாட்டில் மொத்தமுள்ள 102 பொதுத்துறை நிறுவனங்களில் 100 நிறுவனங்கள் மட்டும் தான் செயல்பட்டு வருகின்றன. அவற்றில் 54 நிறுவனங்கள் லாபத்திலும், 35 நிறுவனங்கள் நஷ்டத்திலும் இயங்கி வருகின்றன. இலாபத்தில் இயங்கும் பொதுத்துறை நிறுவனங்களை நினைத்து மகிழ்ச்சி அடைவதற்கு எதுவும் இல்லை. மது வணிகம் செய்யும் டாஸ்மாக், உழவர்களிடமிருந்து அடிமாட்டு விலைக்கு நிலங்களை பறித்து 1000%க்கும் மேல் அதிக விலைக்கு விற்பனை செய்யும் சிப்காட் போன்ற நிறுவனங்கள் தான் இலாபத்தில் இயங்கி வருகின்றன. இந்த 54 நிறுவனங்களும் சேர்ந்து 2022-23ஆம் ஆண்டில் ஈட்டிய இலாபம் வெறும் ரூ.2560 கோடி மட்டும் தான்.

இந்தியாவிலேயே அதிக பொதுத்துறை நிறுவனங்களைக் கொண்டிருக்கும் மாநிலம் தமிழ்நாடு தான். ஒரு மாநிலம் அதன் அனைத்துத் தேவைகளுக்கும் வரி வருவாயை மட்டுமே நம்பிக் கொண்டிருக்க முடியாது. அதிலும் குறிப்பாக ஜி.எஸ்.டி வரி விதிப்பு முறை நடைமுறைப்படுத்தப்பட்ட பிறகு மாநிலங்களின் வரிவிதிப்பு அதிகாரம் பறிக்கப்பட்டு விட்ட நிலையில், வரி அல்லாத வருவாயை மாநில அரசுகள் அதிகரிக்க வேண்டும்.

2025-26ஆம் ஆண்டில் தமிழக அரசின் நிதிநிலை அறிக்கை மதிப்பு ரூ.4 லட்சத்து, 30,434 கோடி ஆகும். ஆனால், தமிழக அரசின் வரி அல்லாத வருவாய் நடப்பாண்டில் வெறும் ரூ.28,818.58 கோடி மட்டும் தான். இது தமிழ்நாட்டின் நிதிநிலை அறிக்கை மதிப்பில் வெறும் 6.69% மட்டும் தான். ஒரு மாநிலத்தின் நிதிநிலை வலிமையாக இருக்க வேண்டும் என்றால், அதன் மொத்த நிதிநிலை அறிக்கை மதிப்பில் 20% அளவுக்கு வரி அல்லாத வருவாய் இருக்க வேண்டும். ஆனால், திமுக அரசின் ஊழல்கள், நிர்வாகச் சீர்கேடுகள் காரணமாக பொதுத்துறை நிறுவனங்கள் சீரழிந்து விட்டதால், வரி அல்லாத வருவாய் அதலபாதாளத்திற்கு சென்று விட்டது. இப்படி ஒரு நிலையை ஏற்படுத்தியதற்காக ஆட்சியாளர்கள் வெட்கப்பட வேண்டும். இதற்கு காரணமான திமுகவுக்கு வரும் தேர்தலில் தமிழ்நாட்டு மக்கள் பாடம் புகட்டப் போவது உறுதி என்று கூறியுள்ளார்.

Published by R.S ROSHINE Printed by R.S. ROSHINE On behalf of R.S. ROSHINE Printed at J.M. Process, No 29, V.N. Doss Road, BorderThottam, Mount Road, Chennai – 600002.
and Published From NO. 42/62, Buchammal Street, 1st Floor, New Washermenpet, Tondiarpet, Chennai, Tamilnadu – 600081. Editor: R.S.ROSHINE, PH: 8122836299, e-mail: paperboynewspaper@gmail.com